# தினபூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 282 புரட்டாசி 01 | Regd. No.CBE/090/2011-2013

கோவை, புதன், செப்டம்பர் 17, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**உலகில் எங்கிருந்தாலும் ஹமாஸ் தலைவர்களை தாக்குவோம்: இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்**

....2-ம் பக்கம்

**ரயில் டிக்கெட் முன்பதிவு முறையில் புதிய மாற்றம்: அக்டோபர் 1 முதல் அமல்**

...3-ம் பக்கம்

**ஆசிய கோப்பை கிரிக்கெட்: முதல் அணியாக சூப்பர் 4 சுற்றை உறுதி செய்த இந்தியா**

....6-ம் பக்கம்





● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறையின் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் திருவள்ளூர், திருநெல்வேலி, திருவாரூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ரூ.28.33 கோடி மதிப்பீட்டில் 77.86 ஏக்கரில் உருவாக்கப்பட்ட 4 புதிய தொழிற்பேட்டை என மொத்தம் ரூ.67.34 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

### திருவள்ளூர், நெல்லை உள்ளிட்ட 4 மாவட்டங்களில்

# ரூ.28.33 கோடி மதிப்பீட்டில் 4 புதிய தொழிற்பேட்டைகள்

## * முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்
## * புதிதாக 5,400 பேருக்கு வேலை கிடைக்கும்

சென்னை, செப். 17-

திருவள்ளூர், திருநெல்வேலி, திருவாரூர் உள்ளிட்ட 4 மாவட்டங்களில் சுமார் 5,400 பேர் வேலை வாய்ப்பு பெற்றிடும், ரூ. 28.33 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 4 புதிய தொழிற்பேட்டைகளை முதல்வர் ஸ்டாலின் நேற்று (செப். 16) திறந்து வைத்தார். மேலும், கடலூர் மாவட்டம், மருதாடில் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் 11.57 ஏக்கரில் புதிய தனியார் தொழிற்பேட்டை உள்ளிட்ட மொத்தம் ரூ.67.34 கோடி மதிப்பீட்டில் 8 முடிவுற்ற திட்டப் பணிகளை அவர் திறந்து வைத்தார். மேலும் ரூ.78.57 கோடி மதிப்பீட்டிலான 20 புதிய திட்டப் பணிகளுக்கும் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

### கோவை, காஞ்சிபுரம்...

முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (செப். 16) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில், திருவள்ளூர், திருநெல்வேலி, திருவாரூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ரூ.28.33 கோடி மதிப்பீட்டில் 77.86 ஏக்கரில் உருவாக்கப்பட்ட 4 புதிய தொழிற்பேட்டைகளும், கடலூர் மாவட்டம், மருதாடில் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் 11.57 ஏக்கரில் புதிய தனியார் தொழிற்பேட்டையும், கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையில் ரூ.24.61 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியும், காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் ரூ.8.20 கோடி மதிப்பீட்டில் உணவுப்பதப்படுத்துதல் குழுமத்திற்கான பொது வசதி மையம், என மொத்தம் ரூ.67.34 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

### 20 திட்டப் பணிகள்...

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் ரூ.29.27 கோடி மதிப்பீட்டில் 3 தளங்களுடன் தொழிலாளர்கள் தங்கும் விடுதி, ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிட்கோ தொழிற்பேட்டையில் வேளாண் பொருட்கள் உற்பத்தி சார்ந்த தொழில்முனைவோர்களுக்காக ரூ.15.23 கோடி மதிப்பீட்டில் 17.95

(கடைசி பக்கம் பார்க்க)

# டெல்லியில் துணை ஜனாதிபதியை நேரில் சந்தித்து இ.பி.எஸ். வாழ்த்து

புதுடெல்லி, செப். 17-

**டெல்லி சென்றுள்ள எடப்பாடி பழனிசாமி, அங்கு துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.**



அ.தி.மு.க.-வில் இருந்து நீக்கப்பட்டவர்களை இணைக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமிக்கு 10 நாட்கள் கெடு விதித்ததால் செங்கோட்டையன் அக்கட்சி பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டார். இதனால், அதிருப்தியடைந்த செங்கோட்டையன் கடந்த வாரம் டெல்லிக்கு சென்று மத்திய அமைச்சர் அமித்ஷாவை சந்தித்துப் பேசியதாக கூறப்பட்டது. மேலும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் எடப்பாடி பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக ஏற்க முடியாது என்று கூறி டி.டி.வி.தினகரனும் கூட்டணியில் இருந்து விலகினார்.

இந்த நிலையில்,

(கடைசி பக்கம் பார்க்க)




**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -118.96 | -44.80 |
| பாயிண்ட் 81,785.74 | பாயிண்ட் 25,069.20 |

**தங்கம்** 1 சவரன் ₹82,240 — 1 கிராம் ₹10,280

**வெள்ளி** 1 கிலோ ₹143,000 — 1 கிராம் ₹143.00

**டாலர்** ₹88.19

**பெட்ரோல்** ₹100.75 — **டீசல்** ₹92.34

# உலகில் எந்த நாட்டில் இருந்தாலும் ஹமாஸ் தலைவர்களை தாக்குவோம்

## இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்

**ஜெருசலேம், செப். 17-**

உலகின் ஹமாஸ் தலைவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் தாக்குவோம் என்று இஸ்ரேல் பிரதமர் கூறியுள்ளார்.

ஹமாஸ் தலைவர்கள் உலகின் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ ஜெருசலேம் நகரில் நெதன்யாகுவை திங்கள்கிழமை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அதனைத் தொடர்ந்து இருவரும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது நெதன்யாகு கூறியதாவது:-

ஹமாஸ் தலைவர்களைக் குறிவைத்து கத்தாரில் நடத்தியதைப் போல இனியும் தாக்குதல் நடத்துவோம். உலகின் எந்த நாட்டுக்கு செல்வதாலும், எங்களிடமிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு கிடைத்துவிடாது. தேசப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எல்லைக்கு அப்பாலும் செயல்படும் உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது. கத்தாரில் நடத்தப்பட்ட தாக்குலுக்கும் அமெரிக்காவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த விவகாரத்தில் நாங்கள் தன்னிச்சையாகத்தான் செயல்பட்டோம் என்றார் நெதன்யாகு.

அமெரிக்காவுடன் நெருங்கிய நட்பு வைத்திருக்கும் கத்தாரில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதால், அமெரிக்க-இஸ்ரேல் உறவில் பின்னடைவு ஏற்படுத்தியுள்ளதா என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மார்கோ ரூபியோ, 'எங்களது வளைகுடா பிராந்திய கூட்டாளிகளுடன் பலமான உறவைப் பேணிவருகிறோம்' என்றார்.

முன்னதாக, மார்கோ ரூபியோ வருகைக்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய நெதன்யாகு, 'அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான நட்புறவு மேற்குச் சுவற்றில் உள்ள கற்களைப் போல் மிக உறுதியானது' என்று கூறியது நினைவு கூரத்தக்கது. கடந்த 2023 அக்டோபர் 7-ஆம் தேதி இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் தலைமையிலான ஆயுதக் குழுவினர், அங்கு 1,139 பேர் படுகொலை செய்தனர்; சுமார் 200 பேரை பிணைக் கைதிகளாகக் கடத்திச் சென்றனர்.

அதையடுத்து, ஹமாஸை முற்றிலுமாக ஒழித்துக்கட்டுவதாக சூளுரைத்த இஸ்ரேல், காஸாவில் மிகக் கடுமையான தாக்குதல் நடத்திவருகிறது. இதில் இதுவரை 64,871 பேர் உயிரிழந்துள்ளனர்; 1,64,610பேர் காயமடைந்துள்ளனர் (திங்கள்கிழமை நிலவரம்). இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவரவும், ஹமாஸிடம் எஞ்சியுள்ள இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிக்கவும் அமெரிக்கா மற்றும் எகிப்துடன் இணைந்து கத்தார் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

இந்தச் சூழலில், அமைதிப் பேச்சுவார்த்தைக்காக கத்தார் வந்திருந்த ஹமாஸ் குழுவினரைக் குறிவைத்து, அவர்கள் தங்கியிருந்த கட்டடத்தின் மீது இஸ்ரேல் கடந்த 9-ஆம் தேதி வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் கத்தாரைச் சேர்ந்த ஒரு பாதுகாவலர் உள்பட ஆறு பேர் உயிரிழந்தாலும், இஸ்ரேலால் குறிவைக்கப்பட்ட ஹமாஸ் தலைவர்கள் காயமின்றி உயிர்தப்பினர். ஏற்கெனவே, காஸா போரின் ஒரு பகுதியாக அங்கும், ஈரான், லெபனான், யேமன், சிரியா, இராக் ஆகிய நாடுகளிலும் இஸ்ரேல் தாக்குதல் நடத்திவந்தது. இந்த நிலையில், கத்தாரில் நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் குண்டுவீச்சுக்கு உள்ளான நாடுகளின் எண்ணிக்கை 6-ஆக உயர்ந்தது.

காஸாவில் அமைதியை ஏற்படுவதற்கான சர்வதேச முயற்சிகளில் மிக முக்கிய பங்கு வகித்துவரும் கத்தாரிலேயே, அதுவும் சமாதானம் பேச வந்திருந்த ஹமாஸ் தலைவர்களைக் குறிவைத்து இஸ்ரேல் நடத்தியது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு இந்தியா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்தன. இந்தச் சூழலில், ஹமாஸ் அமைப்பினர் உலகின் எந்த நாட்டில் இருந்தாலும் அங்கு தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சரின் முன்னிலையிலேயே பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கள்ளக்குறிச்சி கீழத்தாழனூர் கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**கள்ளக்குறிச்சி, செப். 17-**

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கீழத்தாழனூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கீழத்தாழனூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், அருமபாக்கம் கிராமத்தைச் சேர்ந்த கலியபெருமாள் என்பவர் நேற்று முன்தினம் பிற்பகல் சுமார் 2 மணியளவில் கீழத்தாழனூர் கிராமத்தில் இரும்புக்குழாயினை எடுக்க முயன்றபோது எதிர்பாராதவிதமாக உயர்மின் அழுத்த மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த கலியபெருமாளின் குடும்பத்தினருக்கு மூன்று லட்சம் ரூபாய் முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று டி.என்.பி.எஸ்.சி மூலம் சிட்கோ நிறுவனத்தில் உதிவி மேலாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட 11 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். அருகில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உள்ளிட்டோர் உள்ளனர்.

தமிழக முழு நேர டி.ஜி.பி. தேர்வு செய்ய

# செப்.26 டெல்லியில் யு.பி.எஸ்.சி. கூட்டம்

**சென்னை, செப். 17-**

தமிழக காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் மாநில காவல்படைத் தலைவர் பதவிக்கு முழு நேர ஐ.பி.எஸ். உயரதிகாரியை தேர்வு செய்வதற்கான உயர்நிலைக் குழு கூட்டம் வரும் செப்.26 -ஆம் தேதி தில்லியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு அண்மையில் அனுப்பி வைத்த உயரதிகாரிகளின் தகுதி முன்மொழிவுப் பட்டியல் மத்திய குடிமைப் பணி தேர்வாணையத்தின் (யு.பி.எஸ்.சி.) பரிசீலனையில் தற்போது உள்ளது. இதற்கிடையே, இந்த விவகாரத்தில் தமிழக அரசு தாமதமாக செயல்படுவதாகக் கூறி தொடரப்பட்ட வழக்கில் டி.ஜி.பி. தேர்வை விரைவாக நடத்தி முடிக்குமாறு யுபிஎஸ்சிக்கு சென்னை உயர்நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

இந்நிலையில், தமிழக அரசு அனுப்பியுள்ள அதிகாரிகளின் பட்டியலை ஆய்வு செய்வதற்காக செப்டம்பர் 26-இல் யுபிஎஸ்சி தேர்வுக்குழு கூட்டம் தில்லியில் நடைபெறவுள்ளதாக மத்திய உள்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. அதன் முடிவில், தகுதிவாய்ந்த மூன்று ஐ.பி.எஸ். உயரதிகாரிகளின் பெயர்களை டி.ஜி.பி. ஆக நியமிக்க யுபிஎஸ்சி பரிந்துரைக்கும். அதில் இருந்து ஒருவரை மாநில முதல்வரின் ஒப்புதலை பெற்று தமிழக அரசு நியமிக்கும் எனத் தெரிகிறது.

தமிழக காவல் துறை டி.ஜி.பி. பதவியில் இருந்து சங்கர் ஜிவால் கடந்த மாத இறுதியில் ஓய்வு பெற்றார். ஆனால், விதிகளின்படி அப்பதவிக்கு முழு நேர டி.ஜி.பி.யை நியமிக்கும் நடைமுறைகளை தமிழக அரசு சில சட்ட ரீதியிலான காரணங்களால் முன்கூட்டியே தொடங்காமல் தற்காலிக ஏற்பாடாக ஐ.பி.எஸ். உயரதிகாரி வெங்கடராமனை சட்டம் - ஒழுங்கு பொறுப்பு டி.ஜி.பி. ஆக நியமித்துள்ளது.

# அ.தி.மு.க.வை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது

## சென்னை பொதுக்கூட்டத்தில் இ.பி.எஸ். ஆவேசம்



சென்னை கோடம்பாக்கத்தில் அ.தி.மு.க. சார்பில் திங்கள்கிழமை இரவு நடைபெற்ற அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி பேசினார்.

**சென்னை, செப். 17-**

அ.தி.மு.க.வை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிவித்துள்ள அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க.வுக்கு துரோகம் செய்பவர்கள் தன்னந்தனியாக நிற்பது உறுதி என்றும் அவர் தெரிவித்தார்.

அ.தி.மு.க.வுக்கு துரோகம் செய்பவர்கள் தன்னந்தனியாக நிற்பது உறுதி என்று அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார். முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்த தினத்தையொட்டி, அ.தி.மு.க. சார்பில் சென்னை கோடம்பாக்கத்தில் திங்கள்கிழமை இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:

ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் அண்ணா. ஆட்சி மொழியாக தமிழ், தொடர்பு மொழியாக ஆங்கிலம் என இருமொழி கொள்கையை அறிமுகப்படுத்தினார். அடித்தட்டு மக்களுக்காக சிந்தித்து திட்டங்களைச் செயல்படுத்தினார். அவரது மறைவுக்கு பிறகு அண்ணாவின் கனவை நனவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அமல்படுத்தினார். கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்.

அதைத்தொடர்ந்து, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சி காலத்தில்தான் தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. ஒரே ஆண்டில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை கொண்டுவந்து சாதனை படைத்ததும் அ.தி.மு.க. அரசுதான். தமிழகத்தின் உயர்கல்வி வளர்ச்சிக்கு அ.தி.மு.க.தான் காரணம். அ.தி.மு.க.வுக்கு துரோகம் செய்ய நினைப்பவர்கள் தன்னந்தனியாக நிற்பது உறுதி.

அ.தி.மு.க.வை யாராலும் ஒன்று செய்ய முடியாது. ஆட்சி அதிகாரத்தைவிட அ.தி.மு.க.வுக்கு தன்மானம் தான் முக்கியம். ஜெயலலிதாவுக்கு பிறகு அ.தி.மு.க.வை சிலர் கபளீகரம் செய்ய பார்த்தனர். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியைக் காப்பாற்றி கொடுத்தது மத்திய பா.ஜ.க. அரசுதான். அதனால்தான், இப்போதும் பா.ஜ.க.வுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறோம். நன்றி மறப்பது நன்றன்று என்பதால் பா.ஜ.க.வுக்கு நன்றியோடு இருக்கிறோம். திறமையற்ற அரசு தமிழகத்தில் ஆட்சியில் உள்ளது. மத்திய அரசு மீது குற்றஞ்சாட்டி தனது கடமையில் இருந்து முதல்வர் ஸ்டாலின் தப்பிக்க முயற்சிக்கிறார்.

அ.தி.மு.க. ஆட்சியில் மாநில நிதியில் தான் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. தமிழகத்தில் போதைப்பொருள் கலாசாரம்தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்றார் எடப்பாடி பழனிசாமி.

முதலில் கச்சா எண்ணெய், தற்போது சோளம்:

# இந்தியாவை அடிபணிய வைக்க அமெரிக்காவின் புதிய தந்திரம்

**டெல்லி, செப். 17-**

அமெரிக்காவிடம் இருந்து மக்காச்சோளம் இறக்குமதி செய்ய இந்தியா மறுப்பு தெரிவித்தால் அமெரிக்க சந்தையை இந்தியா அணுகுவதை இழக்க நேரிடும் என அமெரிக்க வர்த்த செயலாளர் ஹோவர்ட் லுட்னிக் எச்சரித்துள்ளார்.

இந்தியா- அமெரிக்கா இடையில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள டொனால்டு டிரம்ப் முயற்சி மேற்கொண்டு வருகிறது. நவரத்தினம் முதல் விவசாய பொருட்கள் வரை குறைவான வரி விதிப்பு மூலம் ஏற்றுமதி, இறக்குமதி செய்ய வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் விருப்பம்.

தற்போது அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதாக அமெரிக்கா குற்றம்சாட்டுகிறது. அதேவேளையில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு அமெரிக்கா குறைந்த அளவிலான வரி மட்டுமே விதிப்பதாக அமெரிக்கா கூறுகிறது.

விவசாய பொருட்களில் சமரசம் செய்ய இந்தியா மறுப்பு தெரிவித்து வருகிறது. ஏனென்றால் இந்தியாவில் சிறுகுறு விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபடுகிறார். அமெரிக்காவில் பண்ணை விவசாயம். அமெரிக்காவில் இருந்து வரி இல்லாமல் இந்தியாவில் விவசாயிகள் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டால், இந்திய விவசாயிகளால் தாக்குப்பிடிக்க முடியாது. இதனால் இந்தியா கவனமாக செயல்பட்டு வருகிறது.

இதனால் இந்திய பொருட்கள் மீது அமெரிக்கா கூடுதலாக 25 சதவீத வரி விதித்தது. இருந்த போதிலும் இந்தியா மவுனம் காத்து வந்தது. இதனால் ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்த வேண்டும். இல்லையெனில் கூடுதலாக 25 சதவீதம் வரி விதிப்போம் என இந்தியாவுக்கு நெருக்கடி கொடுத்து வந்தது. அப்போதும் இந்தியா அடி பணியவில்லை. இதனால் கூடுதலா 25 சதவீதம் வரி விதித்தது. இப்படி இந்தியாவுக்கு நெருக்கொடுத்து வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என அமெரிக்கா துடிக்கிறது. ஆனால், இந்தியா அமெரிக்காவின் மிரட்டலுக்கு அடிபணியாமல் உள்ளது. இதற்கிடையே சீனா மற்றும் ரஷ்யா உடன் இந்தியா நெருக்கம் காட்டி வருகிறது. இதனால் பேச்சுவார்த்தையை தொடங்க ஆவலாக இருப்பதாக டிரம்ப் தெரிவித்தார். நேற்று டெல்லியில் பேச்சுவார்தை நடந்தது.

இந்த நிலையில், தற்போது அமெரிக்காவிடம் இருந்து மக்காச்சோளம் இறக்குமதி செய்ய இந்தியா மறுப்பு தெரிவித்தால் அமெரிக்க சந்தையை இந்தியா அணுகுவதை இழக்க நேரிடும் என அமெரிக்க வர்த்த செயலாளர் ஹோவர்ட் லுட்னிக் எச்சரித்துள்ளார். இது தொடர்பாக லுட்னிக் தெரிவித்திருப்பதாவது:- இந்தியா 1.4 பில்லியன் மக்களை கொண்டுள்ளதாக பெருமை பேசுகிறது. 1.4 பில்லியன் மக்களும் ஏன் ஒரு புஷல் (25.4 கிலோ) அமெரிக்க சோளத்தை வாங்க முடியாது?. அவங்க எல்லாத்தையும் நமக்கு விக்கிறாங்க. நம்ம சோளத்தை வாங்க மாட்டாங்கன்னு சொல்றது உங்களுக்குப் புரியலயா?. எல்லாத்துக்கும் வரி விதிக்கிறாங்க.

உங்கள் வரிகளைக் குறைக்கவும், நாங்கள் உங்களை நடத்தும் விதத்தில் எங்களை நடத்தவும் என டொனால்ட் டிரம்ப் இந்தியாவிடம் கேட்டுக் கொண்டுள்ளார். பல வருடங்களாக செய்த தவறைச் சரி செய்யவும், சரிசெய்யும் வரை வேறு வழியில் செல்லவும் (வரி விதிப்பை அமல்படுத்துவது) டிரம்ப் நிர்வாகம் விரும்புகிறது. நீங்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது உலகின் மிகப்பெரிய நுகர்வோன அமெரிக்காவுடன் வணிகம் செய்வதில் கடினமான நேரத்தை எதிர்கொள்ள வேண்டும். இதுதான் டிரம்பின் மாடல். இவ்வாறு லுட்னிக்

# சமையல் கியாசுக்கு 55 சதவீதம் வரியா?

## தமிழ்நாடு அரசு மறுப்பு

**சென்னை, செப். 17-**

சமையல் எரிவாயுவுக்கு 55 சதவீதம் வரி விதிக்கப்பட்டதற்கு தமிழக அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.




தமிழ்நாட்டில் சமையல் கியாசுக்கு மத்திய அரசு 5 சதவீதம்தான் வரி விதிக்கிறது. ஆனால், மாநில அரசு 55 சதவீதம் வரி விதிக்கிறது என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பகிரப்பட்டு வருகிறது.

இது முற்றிலும் தவறான தகவல் என்று தமிழக அரசு சார்பில் விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்ட பதிவில், 'சமையல் கியாஸ் ஜி.எஸ்.டி. வரியின் கீழ் வருகிறது. மத்திய, மாநில அரசு சார்பில் தலா 2.5 சதவீத வரி மட்டுமே சமையல் கியாசுக்கு விதிக்கப்படுகிறது.

எனவே வதந்திகளை பரப்ப வேண்டாம்' என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**17-09-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** இன்று உங்களுக்கு சுமாரான நாள். சுக சௌக்கியத்திற்கு பங்கம் விளையும். எதிர்பார்த்த இனங்களில் பணவரவு தாமதப்படும். அதனால், கைமாத்தாக பிறரிடம் கடன் வாங்க நேரும்.

**ரிஷபம்:-** இதுவரை இல்லாத அளவுக்கு மனதில் தைரியம் அதிகரிக்கும், வாழ்க்கையில் புதிய உற்சாகம் பிறக்கும். மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும்.

**மிதுனம்:-** எடுத்த காரியங்கள் தடைப்படுவது கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். துணிந்து செயல்பட்டு வெற்றி கனியை பறிக்க முயலுங்கள். முயற்சி திருவினையாக்கும். முயலுங்கள் முடியாததில்லை.

**கடகம்:-** தாராளமான பணவரவு மகிழ்ச்சி அளிக்கும். தொழில் மற்றும் வியாபார முன்னேற்றத்திற்கு முக்கிய நபர்களின் சந்திப்பு இனிதாக அமையும். எண்ணியபடி எல்லாம் நல்லபடியாக நடக்கும்.

**சிம்மம்:-** தொழில் புரிவோருக்கு வீண் செலவுகள் ஏற்படும், பணமுடையும் தவிர்க்க முடியாதது ஆகும். உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். நேர்வழியில் பணம் செலவு செய்தால் நிம்மதி பிறக்கும்.

**கன்னி:-** அரசு ஆதரவால் புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனி இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**துலாம்:-** எதிர்பாராத விதமாக பெற்ற திடீர் பணவரவுகள் வர மனம் பரவசப்படும். புதிய ஆடை ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள் சேரும். அரசாங்க உதவிகள் தடையின்றி கிடைக்கும்.

**விருச்சிகம்:-** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கையால் நினைத்தெல்லாம், தடையின்றி நடக்கும். கருத்தரிப்பு அல்லது பிள்ளைப் பிறப்பு ஏற்படலாம்.

**தனுசு:-** எந்த விஷயமானாலும் நியாயத்திற்கு புறம்பாக நடக்கக் கூடாது. வீட்டில் உள்ள பெண்களின் ஒற்றுமை இன்மையால், உறவுகளில் விரிசல் ஏற்படலாம். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் ஆதாயம் பெறலாம்.

**மகரம்:-** இன்று பணத்தைப் பற்றிய பிரச்சனைகள் ஏதுமின்றி தனவரவு தாராளமாக இருக்கும். ஆரோக்கிய மேம்பாட்டால் மருத்துவச் செலவுகள் இருக்காது. வாக்கு வன்மையால் பொருளாதார நிலை மேலும் உயரும்.

**கும்பம்:-** தொழில் மூலம் தனவரவு கூடும். எதிர்ப்புகள் குறையும். நண்பர்கள் தானாக முன்வந்து உதவி செய்வார். பெயரும் புகழும் ஓங்கும். அரசு உதவியால் தொழில் சிறக்கும்.

**மீனம்:-** வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. குழந்தைகளுக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்காது.வாகன சுகம் குறையும்.

வக்பு சட்டத்திருத்தம் குறித்த

# சுப்ரீம் கோர்ட் உத்தரவு நீதிக்கு கிடைத்த வெற்றி

## த.வெ.க. தலைவர் விஜய் அறிக்கை

**சென்னை, செப். 17-**

வக்பு வாரிய சட்ட திருத்தத்தின் சில விதிகளுக்கு சுப்ரீம் கோர்ட் இடைக்கால தடை விதித்து உத்தரவு கிடைத்ததுக்கு த.வெ.க. சார்பில் மனுத்தாக்கல் செய முயற்சி மேற்கொண்ட சட்டக்குழுவிற்கு மனமார்ந்த நன்றி என்று நடிகர் விஜய் கூறியுள்ளார்.



வக்பு வாரிய சட்ட திருத்தத்தின் முழு விதிகளையும் தடை செய்ய மறுத்த சுப்ரீம் கோர்ட், வக்பு வாரிய சட்ட திருத்தத்தின் சில விதிகளுக்கு சுப்ரீம் கோர்ட் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவை வரவேற்று தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் கருத்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக விஜய் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

வக்பு சட்டத்திருத்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவு நீதிக்கு கிடைத்த வெற்றி என தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். வக்பு வழக்கில் த.வெ.க. சார்பில் மனுத்தாக்கல் செய்த முயற்சி மேற்கொண்ட சட்டக்குழுவிற்கு மனமார்ந்த நன்றிகள். சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவு நீதி, அரசியலமைப்பு மதிப்புகள், அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கு கிடைத்த மகத்தான வெற்றி. நீதி சமத்துவம், மத சுதந்திரத்தை கடுமையாக குறைக்கும் விதிகளை சுப்ரீம் கோர்ட் நிறுத்தி வைத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஏழு சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினை பொக்கிஷம் விருது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, செப். 17-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 7 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி, விருதுகள் பெற்ற கைவினைஞர்களின் படைப்புகளை பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.9.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட 7 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, திறன் மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட சிறந்த கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் "வாழும் கைவினைப் பொக்கிஷம்" எனும் விருது வழங்கப்படுகிறது. கைவினைஞர்களை பாராட்டுவதற்கும், அவர்களின் திறனை ஊக்குவிப்பதற்கும், அதன்மூலம் திறனை வெளிக்கொணர்ந்து மற்றவர்களை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் ஆண்டுதோறும் 15 இலட்சம் ரூபாய் மதிப்பிலான விருது வழங்கப்பட்டு வருகிறது. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருவர் வீதம் தலா 8 கிராம் தங்கப் பதக்கம், ஒரு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத்தொகை, தாமிர பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அதன்படி, 2024-2025-ஆம் ஆண்டிற்கான "வாழும் கைவினைப் பொக்கிஷம்" விருதுகளை - கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ந. ராணி வின்செண்ட் (இயற்கை நார் பொருட்கள்) தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கே. பி. வீழிநாதன் (உலோக தகட்டு வேலை), விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த இளவரசி சொக்கர் (மியூரல் ஓவியம்), திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த குப்பு சுப்பிரமணி (கற்சிற்பம்), கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்தது. ரமணி (துணி பொம்மைகள்), கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த என். பூவம்மாள் (சித்திரத்தையல்) மற்றும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ந. துரைராஜ் (மரச்சிற்பம்) ஆகிய 7 விருதாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்கான தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத்தொகை, 8 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

மேலும், "பூம்புகார் மாநில விருது" தமிழ்நாட்டின் கைத்திறத் தொழிலில் சிறந்த கைவினைஞர்களின் பங்களிப்பு, திறன் மற்றும் படைப்புகளை கருத்தில் கொண்டு வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக பத்து கைவினைஞர்களுக்கு ஆண்டுதோறும் 12 இலட்சம் ரூபாய் மதிப்பிலான விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள் 4 கிராம் தங்கப் பதக்கம், ரூபாய் 50 ஆயிரம் பரிசுத்தொகை, தாமிரபத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும். அதன்படி, 2024-2025-ஆம் ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதுகளை - தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ. வெங்கட்ராமன் (பஞ்சலோகசிற்பம்) மற்றும் சி. ரமேஷ் (தஞ்சாவூர் ஓவியம்), சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த மு. குப்புசாமி (தஞ்சாவூர் ஓவியம்), கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த தி. கோபாலகிருஷ்ணன் (மரச்சிற்பம்), கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த க. முருகன் (மரச்சிற்பம்), மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ரா. ஹரிகிருஷ்ணன் (சுடு களிமண் சிற்பம்), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செ. ரஹ்மத் மீராள் பீவி (பாய் நெசவு), கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சி. ஸ்ரீ குமாரி (இயற்கைநார் பொருட்கள்), சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த பா. மேகன்டு (ஆணி நூல் கலை) மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரா. கோகுல்நாத் (நெட்டி வேலை) ஆகிய 10 கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பூம்புகார் மாநில விருதிற்கான தலா 4 கிராம் தங்கப் பதக்கம், 50 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகை, தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

# ரயில் டிக்கெட் முன்பதிவு முறையில் புதிய மாற்றம்

## அக்டோபர் 1 முதல் அமல்

டெல்லி, செப். 17-

ரயில் டிக்கெட் முன்பதிவு முறையில் புதிய மாற்றம் அக்டோபர் மாதம் முதல் அமலுக்கு வருகிறது.

ரயில் டிக்கெட் முன்பதிவு முறையில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும், மோசடியைத் தடுக்கவும் ரெயில்வே ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளது. அக்டோபர் 1, 2025 முதல், பொது முன்பதிவு திறந்த முதல் 15 நிமிடங்களில் டிக்கெட் பதிவு செய்வோர் ஆதாரை கட்டாயமாக இணைத்திருக்க வேண்டும். அவர்களால் மட்டுமே அந்த இடைப்பட்ட நேரத்தில் டிக்கெட் பதிவு செய்ய முடியும்.

தற்போது, தட்கல் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய, ஐ.ஆர்.சி.டி.சி. கணக்குடன் ஆதார் இணைப்பது கட்டாயமாகும். இப்போது இந்தக் கொள்கை பொது ஒதுக்கீட்டு டிக்கெட்டுகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, நவம்பர் 15 ஆம் தேதி பயணிக்கும் பொதிகை எக்ஸ்பிரஸில் டிக்கெட் முன்பதிவு செய்ய விரும்பினால், விதிகளின்படி, முன்பதிவு 60 நாட்களுக்கு முன்பே, அதாவது செப்டம்பர் 16 காலை 8 மணிக்கு தொடங்கும். புதிய விதியின்படி, ஆதார் சரிபார்ப்பை முடித்த ஐ.ஆர்.சி.டி.சி. பயனர்கள் மட்டுமே காலை 8.00 முதல் 8:15 வரை, அதாவது முதல் 15 நிமிடங்களுக்கு டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியும்.

ஆதார் இணைப்பு இல்லாத வாடிக்கையாளர்கள் அந்த நேரத்தில் முன்பதிவு செய்ய முடியாது. இந்த நேரத்தில் டிக்கெட்டுகளுக்கான தேவை அதிகமாக இருப்பதால், சரிபார்க்கப்பட்ட பயணிகளுக்கு முன்னுரிமை அளிக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு வக்பு வாரியத்தின் சார்பில் பொருளாதார தடையினால் உயர்கல்வியினை தொடர இயலாத இஸ்லாமிய மாணவ, மாணவியர்கள் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பினை தொடர கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, இஸ்லாமிய மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையினை வழங்கினார்.

# தமிழ்நாட்டில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 74,000-ஆக உயர்கிறது

சென்னை, செப். 17-

தமிழ்நாட்டில் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 74,000 வாக்குச்சாவடிகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது மொத்தம் 68,000 வாக்குச்சாவடிகள் இருந்தன. இதனை அடுத்து ஒரு வாக்குச்சாவடியில் 1,200 வாக்காளர்களுக்கு மேல் இருக்க கூடாது என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியிருந்தது.

அதன்படி வாக்குச்சாவடிகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என அறிவுறுத்தியிருந்தது. அதன்படி தமிழகத்தில் வாக்குச்சாவடி பணிகளானது மேற்கொள்ளப்பட்டது. இந்த பணிகள் தற்போது முடிவடைந்த நிலையில், தமிழகத்தில் புதிதாக 6,000 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்குச்சாவடிகள் பட்டியல் அனைத்தும் மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் தயார் நிலையில் உள்ளது. அடுத்த ஒரு வாரத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரி அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களிடம் வாக்குச்சாவடிகளின் பட்டியலை கொடுத்து கருத்து கேட்கப்படும். இந்த பணிகள் நிறைவடைந்த பிறகு இந்த பட்டியல் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு இறுதிசெய்யப்படும். இதன்படி, 2026 சட்டமன்ற தேர்தலில் 74,000 வாக்குச்சாவடிகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று தி.மு.க. முப்பெரும் விழா:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கரூர் வருகை

கரூர், செப். 17-

தி.மு.க.வின் முப்பெரும் விழா இன்று (புதன்கிழமை) கரூர் கோடங்கிபட்டியில் நடைபெற உள்ளது. விழாவில் முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார். இதற்காக அவர் இன்று (புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு விமானம் மூலம் திருச்சி வருகிறார்.

தி.மு.க. சார்பில் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 17-ம் தேதி பெரியார் பிறந்தநாள் மற்றும் தி.மு.க. தொடங்கப்பட்ட நாள் ஆகியவற்றை இணைத்து முப்பெரும் விழாவாக ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 17-ம் தேதி நடத்தப்படுவது வழக்கம். அதன்படி இந்தாண்டுக்கான தி.மு.க.வின் முப்பெரும் விழா இன்று (புதன்கிழமை) கரூர் கோடங்கிபட்டியில் நடைபெற உள்ளது. இதையொட்டி அங்கு சுமார் 50 ஏக்கர் நிலத்தில் பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விழாவில் லட்சக்கணக்கானோர் கலந்து கொள்ள உள்ளனர்.

விழாவில் முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார். இதற்காக அவர் இன்று (புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு விமானம் மூலம் திருச்சி வருகிறார். பின்னர், அவர் அங்கிருந்து கார் மூலம் கரூர் வருகை தருகிறார். பின்னர் கரூர் தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் சிறிது நேரம் முதல்வர் ஓய்வெடுக்கிறார். இதனைத்தொடர்ந்து மாலை 4 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு முப்பெரும் விழா நடைபெறும் மேடைக்கு வருகை தர உள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகையையொட்டி கரூரில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் இந்த விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் உள்பட கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

# தீபாவளி சிறப்பு ரயில்களுக்கு இன்று முன்பதிவு தொடக்கம்

## தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, செப். 17-

தீபாவளி உள்ளிட்ட பண்டிகைக் கால சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு இன்று (செப். 17) தொடங்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவை இன்று காலை 8 மணி முதல் பயணிகள் செய்துக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகையையொட்டி சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகிறது. நாகர்கோவில் - தாம்பரம் சிறப்பு ரயில் செப். 28 முதல் அக். 26 வரை அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயக்கப்படும். எதிர் வழித்தடத்தில் இந்த சிறப்பு ரயில், தாம்பரத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு செப்.29- அக். 27 வரை திங்கள்கிழமைகளில் இயக்கப்படும்.

சென்னை - போத்தனூருக்கு இயக்கப்படும் சிறப்பு ரயில் செப். 25 முதல் அக். 23 வரை வியாழக்கிழமைகளில் இயக்கப்படும். எதிர் வழித்தடத்தில் போத்தனூரிலிருந்து சென்னைக்கு செப். 26 முதல் அக். 24 வரை வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு ரயில் இயக்கப்படும். நாகர்கோவிலில் இருந்து சேலம், காட்பாடி வழியாக சென்னை சென்ட்ரலுக்கு சிறப்பு ரயில் செப்.30 முதல் அக்.28 வரை செவ்வாய்க்கிழமைகளில் இயக்கப்படும். எதிர் வழித்தடத்தில் சென்னை சென்ட்ரல்- நாகர்கோவில் இடையே அக்.1 முதல் அக்.29 வரை புதன்கிழமைகளில் சிறப்பு ரயில் இயக்கப்படும்.

தூத்துக்குடி- எழும்பூர் சிறப்பு ரயில் செப். 23 முதல் அக். 23 வரை அனைத்து திங்கள்கிழமைகளிலும் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு இன்று தொடங்குகிறது. மேலும், நெல்லை - எழும்பூர், எழும்பூர் - நெல்லை வந்தே பாரத் ரயில்களில் பெட்டிகளின் எண்ணிக்கை 16-ல் இருந்து 20-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 312 இடங்கள் கூடுதலாக பயணிகளுக்கு கிடைக்கும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

## தமிழகத்தில் இன்று தருமபுரி உள்ளிட்ட

# 28 மாவட்டங்களுக்கு 'மஞ்சள்' எச்சரிக்கை

சென்னை, செப். 17-

தமிழகத்தில் இன்று ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட 28 மாவட்டங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதால் இரு நாள்களுக்கு இந்த மாவட்டங்களுக்கு 'மஞ்சள்' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:- தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்ட மேலடுக்கு சுழற்சி மற்றும் தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், வரும் செப்.21-ஆம் தேதி வரை தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அதன்படி, இன்று (புதன்கிழமை- செப். 17) கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருச்சி, தேனி, திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை உள்ளிட்ட 21 மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதன் காரணமாக இந்த மாவட்டங்களுக்கு 'மஞ்சள்' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னை நகரின் ஒரு சில பகுதிகளில் செவ்வாய்க்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

எனினும், அதிகபட்ச வெப்பநிலை 96.8 டிகிரியை யொட்டி இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா-அமெரிக்கா இடையே டெல்லியில் வர்த்தகப்பேச்சு

புதுதில்லி, செப். 17-

இந்தியா-அமெரிக்கா இருதரப்பு வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நேற்று டெல்லியில் மீண்டும் நடைபெற்றது. தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வர்த்தக துணைப் பிரதிநிதி பிரண்டன் லின்ச் மற்றும் மத்திய வர்த்தகத்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலர் ராஜேஷ் அகர்வால் இடையே இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்திய பொருள்கள் மீது டிரம்ப் நிர்வாகம் விதித்த 50 சதவீத வரி கடந்த மாதம் 27-ஆம் தேதி அமலான நிலையில் இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனால் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வது தொடர்பாக 6-ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்கு ஆக.25 முதல் 29 வரை அமெரிக்க வர்த்தகக் குழு மேற்கொள்ளவிருந்த பயணம் ரத்தானது.

இந்நிலையில், கடந்த வாரம் இந்தியாவுடனான உறவு சிறப்பானது எனவும், விரைவில் இந்தியாவுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும் டிரம்ப் கூறினார். டிரம்ப்பின் இந்தக் கருத்தை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார். இதன் தொடர்ச்சியாக பிரண்டன் லின்ச் இந்தியாவுக்கு திங்கள்கிழமை புறப்பட்டார். அவருடன் இந்தியா சார்பில் ராஜேஷ் அகர்வால் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். மேலும், இந்தப் பேச்சுவார்த்தையில் ஒப்பந்தத்தை இறுதி செய்வது தொடர்பான முடிவு எட்டப்பட வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

## ஒரு நாளில் 2 மாவட்டங்களில் மட்டும்....

# தனது சுற்றுப்பயண திட்டத்தை மாற்றினார் த.வெ.க. தலைவர்..!

சென்னை, செப். 17-

சுற்றுப்பயண திட்டத்தை த.வெ.க. தலைவர் விஜய் மாற்றி அமைத்துள்ளார். ஒரு நாளில் 2 மாவட்டங்களில் மட்டும் சுற்றுப்பயணம் செய்ய விஜய் முடிவு செய்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய், கடந்த 13-ம் தேதி திருச்சியில் தனது பிரசார சுற்றுப்பயணத்தை தொடங்கினார். திருச்சியில் விஜய்யை வரவேற்க த.வெ.க. தொண்டர்கள் அதிக அளவில் குவிந்ததால், அங்கு விஜய் பேசுவதற்கு மிகுந்த காலதாமதம் ஏற்பட்டது.

தொண்டர்கள் சூழ்ந்ததால், சுமார் 7 கிலோ மீட்டர் தூரத்தை அவர் கடந்து பிரசாரம் செய்வதற்கான இடத்திற்கு வர சுமார் 5 மணி நேரம் ஆனது.



தொடர்ந்து அரியலூரில் பேசிவிட்டு, குன்னம் பகுதியில் வாகனத்தின் மீது நின்று கையசைத்தபடி விஜய் சென்றார்.ஆனால் பெரம்பலூர் சென்றபோது நள்ளிரவு நேரமானதால் விஜய் அங்கு பேசாமல் சென்றுவிட்டார்.

இதனால் அங்கு அவருக்காக நீண்ட நேரம் காத்திருந்த த.வெ.க. தொண்டர்கள் ஏமாற்றம் அடைந்தனர். ஒரு நாளில் 3 இடங்களில் பிரசாரம் செய்ய திட்டமிட்டிருந்த விஜய் , 2 இடங்களில் மட்டுமே பிரசாரம் செய்தார்.

இந்த நிலையில் ஒரு நாளில் 2 மாவட்டங்களில் மட்டும் சுற்றுப்பயணம் செய்ய விஜய் முடிவு செய்துள்ளார். 20ம் தேதி நாகை, திருவாரூரில் மட்டும் விஜய் பிரசாரம் செய்வார். அதன்படி மாற்றியமைக்கப்பட்ட புதிய சுற்றுப்பயண விவரங்கள் விரைவில் வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# இன்று முதல் திருச்சியில்-டெல்லி நேரடி விமான சேவை தொடக்கம்

திருச்சி, செப். 17-

திருச்சியில் இருந்து டெல்லிக்கு நேரடி விமான சேவை இன்று முதல் தொடங்கப்படவுள்ளது.

திருச்சியில் இருந்து பல்வேறு வெளிநாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று உள்நாட்டு விமான சேவைகளாக சென்னை, ஐதராபாத், பெங்களூரு, புதுடெல்லி, மும்பை உள்ளிட்ட நகரங்களுக்கு விமான சேவைகள் உள்ளன.

இதில் திருச்சியில் இருந்து ஐதராபாத் வழியாக டெல்லிக்கு விமான சேவை உள்ளது. இதனால் டெல்லி செல்பவர்கள் நீண்ட நேரம் பயணிக்கும் நிலை ஏற்பட்டது. இதனை தவிர்க்கும் வகையில் புதுடெல்லிக்கு நேரடி விமானம் இயக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், திருச்சியில் இருந்து புதுடெல்லிக்கு நேரடி விமான சேவையை இன்டிகோ நிறுவனம் இன்று (புதன்கிழமை) முதல் தொடங்க உள்ளது. இதற்கான முன்பதிவு தொடங்கப் பட்டுள்ளது.

இந்த விமானம் காலை 6 மணிக்கு திருச்சி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு, காலை 9.15 மணிக்கு டெல்லியை சென்றடையும் என்றும், மீண்டும் புதுடெல்லியில் இருந்து இந்த விமானம் மதியம் 2.10 மணிக்கு புறப்பட்டு மாலை 5.25 மணிக்கு திருச்சி விமான நிலையத்தை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விமானத்தில் திருச்சியில் இருந்து டெல்லிக்கு ரூ.6,785 என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 2017-ல் இ.பி.எஸ். தலைமையிலான ஆட்சியை காப்பாற்றியது யார்..?

## டி.டி.வி.தினகரன் பரபரப்பு பேட்டி

சென்னை, செப். 17-

2017-ல் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியை காப்பாற்றியது 122 எம்.எல்.ஏக்களே தவிர பா.ஜ.க. அல்ல என்று தஞ்சையில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறினார்.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு சிலர் கட்சியை கவலைக்கிடமாக்கி ஆட்சியை கவிழ்க்க பார்த்தார்கள். அதை காப்பாற்றி கொடுத்தவர்கள் மத்தியில் இருப்பவர்கள். நன்றி மறப்பது நன்றன்று, எனவே நன்றியோடு நாங்கள் இருக்கிறோம். சிலர் அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்ப்பதற்கு ஓட்டு போட்டார்கள். ஆனால் அவர்களை மன்னித்து துணை முதல்வர் பதவி கொடுத்தோம். மீண்டும் அவர்கள் திருந்தியபாடில்லை. மீண்டும் அ.தி.மு.க.வின் கோவிலான கட்சி அலுவலகத்தை அடித்து உடைத்தார்கள். அவர்களை மீண்டும் கட்சியில் சேர்க்க வேண்டுமா?

இன்னொருவர் அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்ப்பதற்கு 18 எம்.எல்.ஏ.க்களை கடத்தி கொண்டு போனார்கள். அவர்களையும் கட்சியில் சேர்க்க வேண்டுமா?. அ.தி.மு.க.வுக்கு துரோகம் செய்பவர்கள் நடுரோட்டில் தான் நிற்பார்கள் என்று சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி ஆவேசமாக பேசினார்.



இந்தநிலையில், எடப்பாடி பழனிசாமியின் பேச்சுக்கு டிடிவி தினகரன் பதிலடி கொடுத்துள்ளார். இது குறித்து தஞ்சையில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

2017-ல் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியை காப்பாற்றியது 122 எம்.எல்.ஏக்களே தவிர பா.ஜ.க. அல்ல, கூவத்தூரில் எம்.எல்.ஏக்கள் தங்க வைக்கப்பட்டு வாக்களித்ததால்தான் பழனிசாமி முதல்-அமைச்சர் ஆனார், தற்போது அப்பட்டமாக பொய் பேசி வருகிறார். அ.தி.மு.க. அரசை பா.ஜ.க. காப்பாற்றி உள்ளது என பேசுவது தவறு. ஈபிஎஸ்-யை காப்பாற்றியது பா.ஜ.க. இல்லை; சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் தான். சசிகலாவின் பேச்சைக் கேட்டுத்தான் எம்.எல்.ஏக்கள் எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவு தெரிவித்தனர். 122 எம்.எல்.ஏக்கள் சசிகலா சொன்னதால் தான் வாக்களித்தனர்.

எடப்பாடி பழனிசாமி பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதுபோல் உள்ளது. துரோகத்தை தவிர ஈபிஎஸ்-க்கு வேறு எதுவும் தெரியாது. தமிழக மக்கள் முட்டாள் அல்ல. தோல்வி பயத்தில் பழனிசாமி உளறுவது தெரிகிறது. நிச்சயம் தேர்தலில் தோற்கடிக்கப்படுவார்.

பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்க மாட்டேன் என 2024-ம் ஆண்டு மக்களவை தேர்தலுக்கு முன்பு பேசியவர் பழனிசாமி. பழனிசாமி நம்பகத்தன்மையற்ற மனிதர் என அனைவருக்கும் தெரியும். திமுக, தேஜகூ, விஜய் கூட்டணி, நாம் தமிழர் கூட்டணி என 4 கூட்டணிகள் இம்முறை தேர்தலில் களமிறங்கும். அ.தி.மு.க. தோற்றால் எடப்பாடி பழனிச்சாமி தான் காரணம். இந்த முறை எடப்பாடி பழனிச்சாமி தோற்க நாங்கள் காரணமில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு, தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை பெரும்பாலும் நிறைவேற்றிவிட்டது. கொடுக்காத வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளது. சில வாக்குறுதிகள் நிறைவேற்ற முடியாமல் போனதற்கு மத்திய அரசுதான் காரணமாக இடைநிற்கிறது.

- வைகோ



தி.மு.க.வை தோற்றுவித்தவர் அண்ணா. அ.தி.மு.க.வை தோற்றுவித்தவர் எம்.ஜி.ஆர்.. இவர்கள் 2 பேரையும் எடுத்து வருவதால் விஜயை எதிர்க்கிறோம். அண்ணா மீதான நன்மதிப்பு மக்களுக்கு என்றும் மாறாது. அண்ணாவை குறை சொல்ல முடியாது. அண்ணா யார்? என்று அரை மணிநேரம் விஜய்யால் பேச முடியுமா?.

- சீமான்



அ.தி.மு.க.வில் செங்கோட்டையன், எடப்பாடி பழனிசாமி என அடுத்தடுத்து பலரும் டெல்லி செல்கிறார்கள். பா.ஜனதா தலைவர்களை சந்திக்கின்றனர். அ.தி.மு.க.வில் ஜனநாயகம் உள்ளதால் அனைவரும் டெல்லி சென்று தலைவர்களை சந்திக்கின்றனர். தி.மு.க.வில் அந்த ஜனநாயகம் இல்லை.

- நயினார் நாகேந்திரன்



2005, நவம்பரில் முதல்முறையாக ஐக்கிய ஜனதா தளம்-பா.ஜ.க. கூட்டணி பீகாரில் ஆட்சியமைத்தது. பின்னர் எதிரணியினருடனான கூட்டணியில் எனக்கு திருப்தியளிக்கவில்லை. அவர்களுடன் எப்போதும் முரண்பாடே நிலவியது. தற்போது மீண்டும் பா.ஜ.க. கூட்டணிக்கு வந்துவிட்டேன். இனி ஒருபோதும் இந்தக் கூட்டணியைவிட்டு விலகமாட்டேன்.

- நிதீஷ் குமார்

# பெருந்துறை சிட்கோவில் ரூ.15.23 கோடியில் வேளாண் உற்பத்தி சார்ந்த தொழிலை மேம்படுத்தும் திட்டம்

## தமிழக முதல்வர் அடிக்கல் நாட்டினார்



ஈரோடு, செப். 17-

பெருந்துறை சிட்கோ தொழிற் பேட் டை யில் ரூ.15.23 கோடி மதிப்பீட்டில் வேளாண் உற்பத்தி சார்ந்த தொழிலை மேம்படுத்தும் திட்டத்திற்கு தமிழக முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

ஈரோடு மாவட்ட சிறு தொழில் சங்கமான 'ஈடிசியா' தொழில் துறைக்காக இயங்கி வருகிறது. இச்சங்கம் சார்பில் ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிட்கோ தொழிற் பேட் டை யில் வேளாண் உற்பத்தி சார்ந்த தொழில் முனைவோர்களுக்காக உட்கட்டமைப்பினை மேம்படுத்த வேண்டும் என தொடர்ந்து அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது. இந்த கோரிக்கையை ஏற்ற தமிழக அரசு, ரூ.15.23 கோடி நிதி ஒதுக்கியது. இந்நிலையில், பெருந்துறை சிட்கோ தொழிற்பேட்டையில் வேளாண் உற்பத்தி சார்ந்த தொழில் முனைவோர்களுக்காக புதிய உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் திட்டத்திற்கான பணிகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காணொளி வாயிலாக அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். இந்த திட்டம் மாவட்டத்தில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் எனவும், மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் எனவும், இந்த திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய தமிழக முதல்வருக்கு ஈடிசியா நிர்வாகிகள் நன்றி தெரிவித்தனர். நிகழ்ச்சியில், ஈடிசியா தலைவர் கந்தசாமி, முன்னாள் தலைவர் திருமூர்த்தி, துணை தலைவர் சுரேஷ், இணை செயலாளர் சக்திவேல், வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, சிட்கோ கிளை மேலாளர் ஷர்மிளா, சிப்காட் திட்ட அலுவலர் சுஜா பிரியதர்ஷினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# 763 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 9357 உறுப்பினர்களுக்கு ரூ.95.72 கோடி மதிப்பில் வங்கி கடனுதவிகள்: அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்

ஈரோடு,செப்.17-

ஈரோடு, சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மகளிர் திட்டம் சார்பில் 763 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 9357 உறுப்பினர்களுக்கு ரூ.95.72 கோடி மதிப்பீட்டிலான வங்கி கடனுதவிகளையும், அடையாள அட்டைகளையும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வழங்கினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.3500 கோடி ரூபாய் வங்கிக் கடனுதவிகள் மற்றும் அடையாள அட்டை வழங்கியதைத் தொடர்ந்து, ஈரோடு மாவட்டம், சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில், வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் , ஊரகப் பகுதியில் உள்ள 431 சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 5172 உறுப்பினர்களுக்கு ரூ.54.92 கோடியும், ஊரகப் பகுதியில் பெருங்கடன் இணைப்பாக ஒரு கூட்டமைப்பினை சேர்ந்த 120 உறுப்பினர்களுக்கு ரூ.1.10 கோடியும், சமுதாய முதலீட்டு நிதியாக 21 சுயஉதவிக் குழுக்களை சார்ந்த 252 உறுப்பினர்களுக்கு ரூ.0.30 கோடியும், தனிநபர் தொழில் முனைவோர் கடனாக 93 உறுப்பினர்களுக்கு ரூ.1.30 கோடியும் மற்றும் நகர்ப்புறப் பகுதியில் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் சுயஉதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பாக 310 சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 3720 உறுப்பினர்களுக்கு ரூ.38.10 கோடியும் என மொத்தம் 763 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 9357 உறுப்பினர்களுக்கு ரூ.95.72 கோடி மதிப்பீட்டிலான வங்கி கடனுதவிகள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்கினார்.

தொடர்ந்து வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் , மகளிர் சுய உதவிக்குழுக்களால் அமைக்கப்பட்டு இருந்த கருத்துகாட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், கலெக்டர் ச.கந்தசாமி மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி. சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்காடசலம் (அந்தியூர்), ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், ஈரோடு மாநகராட்சி மண்டல குழுத்தலைவர் பி.கே.பழனிச்சாமி, பவானி நகர் மன்ற தலைவர் சிந்துாரி இளங்கோ, புஞ்சைபுளியம்பட்டி நகர்மன்ற தலைவர் ஜெகநாதன், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) ப.கந்தராஜா, திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) மலர்விழி, ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உதவி திட்ட அலுவலர்கள் பாஸ்கர், சாந்தா, சசிரேகா, பெருமாள், முருகேசன், ஜோதி கிருத்திகா, கண்ணன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நந்தா பொறியியல் கல்லூரியில் ஆசிரியர் மற்றும் பொறியாளர் தின கொண்டாட்டம்



ஈரோடு செப் 17-

நந்தா பொறியியல் கல்லூரியில் முனைவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் பிறந்த நாளான "ஆசிரியர் தினம்" மற்றும் சமோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த நாளான "பொறியாளர் தினம்" ஆகிய இரண்டு சிறப்பு தினங்கள் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ ரத்தா கல்வி அறக்கட்டளையின் தலைவன் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இக்கொண்டாட்டத்தில் சேலம் நாலேட்ஜ் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் பி.எஸ்.எஸ். சீனிவாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.பின்னர் நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் யு.எஸ். ரகுபதி இரு பெரும் மேதைகளை நினைவு கூறும் வகையில் முன்னுரையாற்றினார். முன்னதாக செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறையின் பேராசியரும். நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளருமான பேராசிரியர் கே. குணசேகரன் வரவேற்றார். மேலும் நந்தா கல்வி நிறுவனங்களின் முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம், நிர்வாக அலுவலர் . ஏ.கே. வேலுசாமி, புலமுதல்வர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் பலர் முன்னிலை வகித்தார்கள்.பின்னர் முனைவர் சர்வபல்லி இராதாகிருஷ்ணல் மற்றும் சர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யா ஆகியோரின் புகைப்படங்களுக்கு முன், சிறப்பு விருந்தினர் உட்பட அனைவரும் மலர்களைத் தூவி மரியாதை செய்து வழிப்பட்டார்கள் இதனைத் தொடர்ந்து, ஆசிரியர் மற்றும் பொறியாளர் தினத்தினை முன்னிட்டு கடந்த கல்வியாண்டில் சிறந்த ஆராய்ச்சி, பொறியியல் துறை நிறுவனங்களுக்கு சிறந்த ஆலோசனை. கற்பித்தலில் புதுமை, சிறந்த துறைத்தலைவர் போன்ற பிரிவுகளில் சிறப்பான முனையில் செயல்புரிந்த பேராசியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். பின்னர் சேலம் நாலேட்ஜ் தொழில்நுட்ப கலவி நிறுவனத்தின் நிர்வாகத் தலைவம் பீ.எஸ்.எஸ். சீனிவாசன் சிறப்புரையாற்றினார் .இக்கொண்டாட்டத்தினை ஏற்பாடு செய்திருந்த முதல்வர், ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன். செயலர் நந்தகுமார் பிரதீப், மற்றும் நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி ஆகியோர் பாராட்டி தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

# 405 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.42.63 கோடி மதிப்பில் வங்கிக்கடன் உதவிகள்: ஊட்டியில் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் வழங்கினார்

ஊட்டி, செப்.17-

405 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.42.63 கோடி மதிப்பில்; வங்கிக்கடன் உதவிகளை அரசு தலைமை கொறடா காராமச்சந்திரன் வழங்கினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாபெரும் வங்கிக்கடன் இணைப்புகள் மற்றும் அடையாள அட்டைகளை நேற்று (16.09.2025) வழங்கியதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், ஊட்டி பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிர் திட்டம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், 405 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.42.63 கோடி மதிப்பில்; வங்கிக்கடன் உதவிகள் மற்றும் 5,000 மகளிர் சுய குழுவின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு கொறடர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான மாபெரும் வங்கிக்கடன் இணைப்புகள் மற்றும் அடையாள அட்டைகளை இன்று சேலம் மாவட்டத்தில் துணை முதல்வர் வழங்கினார்.

அதனை தொடர்ந்து, நமது மாவட்டத்தில், ஊரகப் பகுதிகளில் 204 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.22.23 கோடி மதிப்பிலும், நகர்புற பகுதிகளில் 161 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.18.47 கோடி மதிப்பில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கி கிளைகளின் மூலம் வங்கி கடன் உதவிகளும், 40 சுய உதவி குழுக்களில் உள்ள 80 உறுப்பினர்களுக்கு ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு கடனுதவிகளும், சுய உதவி குழுக்களில் உள்ள பெண் தலைமையேற்று நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கான வங்கி கடனாக 141 நபர்களுக்கு ரூ.1.33 கோடி கடனுதவிகள் என மொத்தம் 405 சுய உதவி குழுக்களில் உள்ள 9,294 உறுப்பினர்களுக்கு ரூ. 42.63 கோடி கடனுதவிகளும், முதற்கட்டமாக 5,000 மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளும்; வழங்கப்பட்டது.

மேலும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் விவசாயம், தேயிலை மற்றும் காபி தோட்டங்களை குத்தகைக்கு எடுத்தல், மண்பாண்டம் தயாரித்தல், நீலகிரி தைலம் தயாரித்தல், தேன் எடுத்தல், தையல் மற்றும் எம்பிராய்டரி தொழில் போன்ற பல்வேறு வாழ்வாதார தொழில் மேன்பாட்டிற்காக வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதனை பெற்று சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தாமாக சுய தொழில் செய்து வருவதால் அவர்களின் பொருளாதாரம் உயர்ந்து வருவதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மகளிர்கள் பயன்பெறும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் ஏற்கனவே 1.12 இலட்சம் மகளிர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகிறார்கள். தற்போது நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களிலும், மகளிர் உரிமைத்தொகை கோரி பல்வேறு விண்ணப்பங்கள் தொடர்ந்து பெறப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் தகுதி வாய்ந்த எந்தவொரு மகளிரும் விடுபடாத வகையில் உரிமை தொகை சென்றடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்;.

அதேபோல், பெற்றோர் இல்லாத குழந்தைகள் மற்றும் பெற்றோரால் பராமரிக்க முடியாத சூழலில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி அளித்து ஆதரவு அளிக்கும் வகையில், 12 ஆம் வகுப்பு வரை மாதந்தோறும் ரூ.2,000- வழங்கும் அன்புக்கரங்கள் என்ற சிறப்பு வாய்ந்த திட்டத்தினை, தமிழ்நாடு முதலமைச்சர் நேற்றைய தினம் தொடங்கி வைத்தார்;. இதுபோன்று பல்வேறு அரசின் திட்டங்களை தெரிந்து கொண்டு பொதுமக்கள் அனைவரும் பயன்பெற வேண்டும் என அரசு தலைமைக்கொறடா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், நகர்மன்ற தலைவர்கள் வாணீஸ்வரி, (ஊட்;;;டி), சுசீலா (குன்னூர்), ஜெயகுமாரி (கோத்தகிரி), உதவி திட்ட அலுவலர்கள்; ரமேஷ், ஜெயராணி, சாந்தசீலன், பிரீத்தா, சந்திரசேகரன், தினேஷ்பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டி அரசு மேல்நிலை பள்ளியில் சர்வதேச ஓசோன் தினம் கடைபிடிப்பு



ஊட்டி, செப்.17-

நீலகிரி மாவட்ட தேசிய பசுமை படை சார்பில் ஊட்டி அரசு மேல்நிலை பள்ளியில் சர்வதேச ஓசோன் தினம் அனுசரிக்கப்பட்டது.

பள்ளி தலைமை பொறுப்பாசிரியர் ஷி ரின் வரவேற்பு உரை நிகழ்த்தி பேசுகையில் எதிர்காலம் சூழல் பதிப்புகளை அதிகம் முன்னெடுக்கும் நிலை உருவாகி வருகிறது.மாணவர்கள் அறிவு திறன் கொண்டு உலகளாவிய சூழல் மற்றும் உள்ளூர சூழல் மாற்றங்களை கருத்தில் கொண்டு இயற்கைக்கு பாதிப்பில்லாத தொழில் நுட்பம் மேற்கொள்ள செயல் முறை திட்டங்கள் உருவாக்குவது அவசியம் என குறிப்பிட்டார்.

ஆசிரியர் சகாதேவி ஓசோன் படலம் பாதிப்பிற்கு மனித செயல்கள் தான்முக்கிய காரணமாகின்றது. இதனை கட்டுபடுத்த வீடுகளில் நாம் பயன்படுத்தும் குளிர் சாதன பெட்டிகள், வாசனை திரவியங்கள் ,வாகனங்களில் தேவைக்கு அதிகமாக குளிர் சாதனங்கள்பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என குறிப்பிட்டார்.

தேசிய பசுமை படை ஒருங்கிணைப்பாளர் வே.சிவதாஸ் குறிப்பிடுகையில் ஐக்கிய நாடுகளின் சபை மாண்ட்ரீஸ் நெறிமுறைகள் குறித்து விளக்கமளித்தார்.1987 ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்க பட்டு வரும் ஓசோன் தினம்

இந்த வருட சர்வதேச ஓசோன் நாள் கருப்பொருள் 'வாழ்விற்கு அடிப்படை ஓசோன் ' என்ற முழக்கமாகும்.

சூரியனில் இருந்து வரும் புற ஊத கதிர்கள் நேரடியாக தாக்காமல் அதனை தடுக்கும் ஓசோன் படலம் வலு இழக்க செய்யும் ரசாயனங்களால்,இயற்கை வளங்களை பாதிக்க செய்கின்றது. கடல் வாழ் உயிரினங்கள், தாவர வளர்ச்சிக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. உலகின் பல நாடுகளில் தோல் புற்று நோய் பதிப்புக்கள் அதிகம் ஏற்படுகின்றது. கண் புரை ஏற்படுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

மாணவர்கள் ஓசோன் படலத்தை பாதிக்கும் ரசாயனங்களுக்கு மாற்றாக இயற்கைக்கு பாதிப்பில்லாத தொழில் நுட்பம் கண்டுபிடிக்கும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார் வாசனை திரவியங்கள் , ரசாயன உதட்டு சாயங்கள் தலை முடிகளுக்கு பயன் படுத்தும் ஸ்ப்ரேயர் சூழல் பதிப்பில்ல பொருட்கள் குறிப்பறிந்து பயன்படுத்துவது அவசியம் என குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் செலினா வயலட், பயிற்சி ஆசிரியர் மா ரகீரன் கலந்து கொண்டனர். ஓவிய ஆசிரியர் ராஜ்குமார் நிகழ்வுக்கான ஏற்பாட்டினை செய்திருந்தார்

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

# ஊட்டி காந்தல் பகுதியில் தரம் உயர்த்தப்பட்ட அரசு உருது உயர்நிலை பள்ளி: அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்

ஊட்டி, செப்.17-

நீலகிரி மாவட்டம், ஊட்டி நகராட்சி காந்தல் பகுதியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன்;, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நேற்று (16.09.2025) தரம் உயர்த்தப்பட்ட அரசு நகராட்சி உருது உயர்நிலை பள்ளியின் கல்வெட்டினை திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி வைத்தார்;. இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:



தமிழ்நாடு முதலமைச்சரின்; அறிவுரையின்படி, அரசு நகராட்சி உருது உயர்நிலைப் பள்ளி இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. உருது பேசுகின்ற இஸ்லாமிய மாணவ, மாணவிகளுக்காக நீலகிரி மாவட்டம் ஊட்டி நகராட்சி காந்தள் பகுதியில் உள்;ள சிறுபான்மை உருது நடுநிலைப்பள்ளியினை, அரசு நகராட்சி உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி தர வேண்டும் என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் என்னிடம் கோரிக்கை வைத்தார். அதனடிப்படையில், நான், தமிழ்நாடு முதலமைச்சர்; கவனத்திற்கு கொண்டு சென்றதின் காரணத்தினால், இக்கோரிக்கையினை சிறப்பு அம்சமாக எடுத்துக் கொண்டு, இப்பள்ளியினை தரம் உயர்த்தி தந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

தரம் உயர்வு என்பது பள்ளி கூடத்தினை மட்டும் தரம் உயர்த்துவது அல்ல. இதன் மூலம் குழந்தைகளின் கல்வி மற்றும் வாழ்க்கைத்தரம் உயர்கிறது. உருது மக்களின் வாழ்க்கையில் அதிக அளவில் கவனம் செலுத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் , உருது மொழியில் பயிலும் மாணவச் செல்வங்களின் வாழ்க்கையும் உயர வேண்டும் என்ற நோக்கில் தான் இதுபோன்றதொரு தரம் உயர்த்துதல் நிகழ்வில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். இருளில் உள்ள நம்மை வெளிச்சத்திற்கு கொண்டு வருவது கல்வி ஆகும். சிந்திக்க கூடிய ஆற்றலை உருவாக்கி தருபவர்கள் ஆசிரியர்கள், அந்த சிந்தனை திறனை உருவாக்கி தரக்கூடிய இடம் பள்ளிக்கூடம். அதிகபடியான தேவைகள் உள்ள பள்ளிக்கூடத்தினை தேர்ந்தெடுத்து அப்பள்ளியினை தரம் உயர்த்த வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்;. நான் முதல்வன் திட்டம், தாயுமானவர் திட்டம், அன்புகரங்கள் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே கல்வியில் முதலிடத்தில் தமிழ்நாடு உள்ளது. எனவே மாணாக்கர்களை அதிக மதிப்பெண் பெற வைப்பதோடு மட்டுமல்லாமல், நல்ல ஒழுக்கத்தினையும் கற்றுக் கொடுப்பது ஆசிரியர்களின் கடமை ஆகும். கல்வி நமக்கு மரியாதையையும், மதிப்பினையும் பெற்றுத்தரும். எனவே அனைவரும் நன்றாக கல்வி கற்று உயர்ந்த நிலையினை அடைய வேண்டும்.

நேற்றை தினம் தமிழ்நாடு முதலமைச்சர் பெற்றோர் இல்லாத குழந்தைகள் மற்றும் பெற்றோரால் பராமரிக்க முடியாத சூழலில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி அளித்து ஆதரவு அளிக்கும் வகையில், 12 ஆம் வகுப்பு வரை மாதந்தோறும் ரூ.2,000- வழங்கும் அன்புக்கரங்கள் என்ற திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார். அந்த பெருமைமிகு திட்டத்தோடு, இந்த தரம் உயர்த்தப்பட்ட பள்ளிக்கான ஆணையினையும் வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு மாவட்ட மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அரசு நகராட்சி உருது நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதற்கான ஆணையினையும், மாணவ, மாணவிகள் அளித்த 9 ஆம் வகுப்பு சேர்க்கைக்கான விண்ணப்ப படிவத்தினையும், மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் தலைமையாசிரியர் ஆகியோரிடம் வழங்கினார். அதனை தொடர்ந்து, பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் தலைமையாசிரியர் ஆகியோர் இணைந்து, பள்ளிக்கல்வித்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், வாழ்த்து மடல்களை வழங்கினார்கள்.பின்னர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டம் காந்தல் அரசு நகராட்சி உருது நடுநிலைப்பள்ளி, அரசு நகராட்சி உருது உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. பள்ளி மேலாண்மைக் குழு வகுப்பறை கட்டடம் வேண்டி மனு அளித்துள்ளனர். எங்கெங்கெல்லாம் தரம் உயர்த்த வேண்டும் என்ற சூழ்நிலை உள்ளதோ அங்கெல்லாம் தரம் உயர்த்ர்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், இடைநிற்றல் என்ற சூழ்நிலை ஏற்படாத வகையிலும், குழந்தைகளின் கல்வித்திறனை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலும் பல்வேறு மாவட்டங்களில் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மாணவ செல்வங்கள் இதனை பயன்படுத்தி கொண்டு நன்றாக படிக்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், வருவாய் கோட்டாட்சியர் டினுஅரவிந்த், நகராட்சி ஆணையாளர் கணேஷ், மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) சின்னமாது, நகர்மன்ற தலைவர்கள் வாணீஸ்வரி, (உதகை), ஜெயகுமாரி (கோத்தகிரி), நகர்மன்ற துணைத்தலைவர்கள் ரவிக்குமார்(உதகை), வாசிம்ராஜா (குன்னூர்), உதவி திட்ட அலுவலர் அர்ஜீணன், வட்டார கல்வி அலுவலர் நந்தினி, திட்ட குழு உறுப்பினர்; ஜார்ஜ், நகர்மன்ற வார்டு உறுப்பினர்கள் தம்பிஇஸ்மாயில், அபுதாகீர், கீதா, திவ்யா, தலைமையாசிரியர் (உயர்நிலைப்பள்ளி) பிராங்ளின் வில்லியம், தலைமையாசிரியர் (நடுநிலைப் பள்ளி) முகம்மத்அமீன்தாவுத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட அளவிலான கால்பந்து போட்டி: கொங்கு கல்வி நிலைய மாணவர்கள் சாதனை



ஈரோடு, செப். 17- ஈரோடு மாவட்டத்தில் தமிழக முதல்வர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் மற்றும் வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகள் நடந்தது.

இதில், கால்பந்து போட்டியில் ஈரோடு ரங்கம்பாளையம் கொங்கு கல்வி நிலையம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பங்கேற்று, சிறப்பாக விளையாடி முதலிடம் பிடித்து சாதனை படைத்தனர்.

இதேபோல், தேசிய அளவில் கோலாலம்பூர், மலேசியாவில் கடந்த 12ம் தேதி நடந்த சிலம்பம் போட்டியில் பள்ளியின் 7ம் வகுப்பு மாணவன் சுதர்சன் வெள்ளி மற்றும் வெண்கல பதக்கமும், அந்தியூரில் மாவட்ட அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் 7ம் வகுப்பு மாணவி அபிகேள் 2 தங்கப் பதக்கமும், மற்றொரு பிரிவில் வெள்ளி பதக்கமும் பெற்றனர்.

கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், பயிற்சி அளித்த ஆசிரியர் ராஜ்கமல் மற்றும் பதக்கங்கள் வென்ற மாணவ-மாணவிகளுக்கும் பள்ளியில் பாராட்டு விழா நடந்தது.

இதில், பள்ளியின் அறக்கட்டளை தலைவர் சின்னசாமி, மற்றும் தாளாளர் செல்வராஜ், பொருளாளர் குணசேகரன், உதவித்தலைவர்கள் தேவசிகாமணி, சோமசுந்தரம், இணைச்செயலாளர் மீனாட்சிசுந்தரம், இணைப் பொருளாளர் நாகராஜ், பள்ளி முதல்வர் நதியா அரவிந்தன் ஆகியோர் பங்கேற்று மாணவர்களையும், பயிற்சி அளித்த ஆசிரியரையும் பாராட்டி வாழ்த்தினர்.



அண்ணா 117 வது பிறந்தநாள் முன்னிட்டு காஞ்சிபுரம் மண்டல அதிமுக தொழில்நுட்ப பிரிவு மாவட்ட தலைவர் டாக்டர்கே.கார்த்திக்திருவுருவபடத்திற்குமாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.அவருடன் வட்ட செயலாளர் எம்.கண்ணன், முன்னாள் வட்ட செயலாளர் எஸ்.ஸ்டிபன், முன்னாள் வட்ட துணை செயலாளர் செந்தூர்பாண்டி, சுப்பிரமணியம் கலந்து கொண்டனர்.



சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் 768 சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 13670 உறுப்பினர்களுக்கு ரூபாய் 105.60 கோடி ரூபாய் வங்கி கடன் இணைப்பு மற்றும் சுய உதவிக் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டையும் வழங்கினர்.உடன் மேயர் ஆர்.பிரியா தென்சென்னை பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் கருணாநிதி அரவிந்த் ரமேஷ்,ஏ.எம். வி.பிரபாகர் ராஜா கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சி சார்பில் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில்

# கடந்த ஒரு மாத காலத்தில் சிறப்பு முகாம்களின் வாயிலாக 46,122 தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் (ரேபிஸ்) தடுப்பூசி மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்கம் மருந்து செலுத்தப்பட்டுள்ளது

சென்னை,செப்.17 சென்னை மாநகராட்சியில் தெருநாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், வளர்ப்பு நாய்களை முறைப்படுத்துவதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் இதுதொடர்பாக ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி தெருநாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம், 1960ன் பிரிவு 38ன் கீழ் நாய் இனக்கட்டுபாட்டு விதிகள்-2023 வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்த பிறகு 5 நாட்கள் நாய் இனக் கட்டுப்பாட்டு மையத்தில் பாரமரித்து, வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் மீண்டும் பிடித்த இடத்திலேயே விடப்பட வேண்டும்.

தெருநாய்களை மனிதாபிமான முறையில் வலைகள் மற்றும் கைகளால் மட்டுமே பிடிக்க வேண்டும்.

பாலூட்டும் நாய்கள் மற்றும் ஆறு மாத வயது குறைவான நாய்க்குட்டிகளை இனப்பெருக்க அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தக் கூடாது.

தெருநாய்களை அழிப்பதற்கு சட்டத்தில் வழிவகை இல்லை நோய் முற்றிய, இறக்கும் தருவாயில் உள்ள காயமுற்ற நாய்களை மட்டுமே கண்காணிப்புக் குழுவால் நியமிக்கப்பட்ட மருத்துவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் அவற்றை கருணை கொலைக்கு உட்படுத்த முடியும் தெருநாய்கள் உள்ளிட்ட எந்த விலங்குகளையும் விஷ ஊசி செலுத்தியோ பிற கொடுமைப்படுத்தும் முறையிலோ காயப்படுத்துவதோ, கொல்வதோ குற்றமாகும்.

மேலும் பாரதிய நியாய சன்ஹிதா 2023 சட்டம், பிரிவு-325ன் படி, "எந்த ஒரு விலங்கையும் கொல்வதன் மூலமோ, விஷம் வைப்பதன் மூலமோ, ஊனப்படுத்துவதன் மூலமோ, பயனற்றதாக மாற்றுவதன் மூலமோ, தீங்கு அல்லது சேதம் செய்பவர்கள் 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படுவர்".

இச்சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த பொது மக்களிடமிருந்து தெருநாய் தொல்லைகள் தொடர்பான புகார்களைப் பெற 1913 என்ற உதவி எண்ணிலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்கள் சேவைக்கான வாட்ஸ் ஆப் எண் 94450 61913 வாயிலாகவும் புகார் தெரிவிக்கலாம்.தற்போது நாய்களைப் பிடிக்கும் பணியை மேற்கொள்ள 23 நாய் பிடிக்கும் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. ஒவ்வொரு வாகனத்திற்கும் 5 நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் ஒரு ஓட்டுநர் நியமிக்கப்பட்டுள்ளனர். நாய் பிடிப்பவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டு, நாய்களைப் பிடித்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. நாய்களைப் பிடிப்பதற்காக வலைகள் வழங்கப்பட்டு, அதனைக் கொண்டு நாய்கள் பிடிக்கப்படுகின்றன. நாய்களை முறையாகப் பிடித்து விடுவிப்பதை உறுதி செய்வதற்காக, QR குறியீடு காலர்கள் மற்றும் மைக்ரோ சிப் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 12,255 தெருநாய்களுக்கு மேற்கண்ட QR குறியீடு காலர்கள் மற்றும் மைக்ரோ சிப் பொருத்தப்பட்டுள்ளது.



நாய்களுக்கு கழுத்துப்பட்டை QR குறியீடு & மைக்ரோ சிப் செலுத்தும் பணி கீழ்காணும் நடைமுறையின்படி செயல்படுத்தப்படுகிறது.தெருநாய்கள் பிடிக்கப்படும் இடம் QR கோடுடன் உள்ள கழுத்துப்பட்டை நாயின் கழுத்தில் கட்டப்பட்டு ஸ்கேன் செய்யப்படும். இதன்மூலம் GPS இருப்பிடம் பதிவு செய்யப்படும். நாய்இனக்கட்டுபாட்டு மையம் மீண்டும் ஸ்கேன் செய்யப்பட்டு அடையாளம் உறுதி செய்யப்படும்.கருத்தடை அறுவை சிகிச்சையின் போது மைக்ரோ சிப் பொருத்தப்படுதல்.கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிறகு மைக்ரோசிப் மீண்டும் ஸ்கேன் செய்யப்படும். நாய்இனக்கட்டுபாட்டு மையத்தில் நாய்கள் விடுவிக்கப்படும் போது மைக்ரோ சிப் மீண்டும் ஸ்கேன் செய்யப்பட்டு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்டது உறுதி செய்யப்படும்.தெருநாய்கள் விடுவிக்கப்படும் இடம் QR குறியீடு ஸ்கேன் செய்யப்பட்டு புவிசார் குறியீடு (GPS)மூலம் இருப்பிடம் உறுதி செய்யப்படும். தெருக்களில் பிடிக்கப்படும் தெருநாய்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் செயல்பட்டு வரும் புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாபேட்டை, மீனம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 5 இடங்களில் உள்ள நாய் இனக்கட்டுப்பாடு மையங்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சைக்காக கொண்டு செல்லப்படுகிறது. நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்களில் தெருநாய்களை பரிசோதித்து, உடற்தகுதியுள்ள தெருநாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு 4 முதல் 6 நாட்கள் வரை பராமரிக்கப்படுகிறது. அவ்வாறு பராமரிக்கப்படும் நாய்களுக்கு செறிவூட்டப்பட்ட உணவும், சமைத்த அசைவ உணவும் வழங்கப்பட்டு வருகிறது. வெறிநாய்க்கடி நோய் பாதிப்புள்ளதாக சந்தேகிக்கப்படும் நாய்கள் தனிக் கூண்டுகளில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.காலனி மற்றும் கண்ணம்மாப்பேட்டை ஆகிய 3 நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையங்களில் சராசரியாக தலா 30 நாய்கள் வீதம் 90 தெருநாய்களுக்கும், மீனம்பாக்கம் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தில் சராசரியாக 15 தெருநாய்களுக்கும், சோழிங்கநல்லூர் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தில் சராசரியாக 10 தெருநாய்களுக்கும் என இந்த 5 நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மையங்களில் சராசரியாக நாளொன்றுக்கு 115 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேற்கண்ட மையங்களின் மூலம் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் 15.09.2025 வரை 88,439 தெருநாய்கள், 46,235 செல்லப் பிராணிகள் என மொத்தம் 1,34,674 நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியும், இதில் கருத்தடை செய்ய தகுதியுள்ள 71,475 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (2024) WVS என்ற நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்ட தெரு நாய்கள் கணக்கெடுப்பில் சுமார் 1,80,000 தெரு நாய்கள் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களிடமிருந்தும், செய்தி ஊடகங்கள் வாயிலாகவும் தெருநாய்களால் ஏற்படும் தொல்லைகள் குறித்து அதிகளவில் புகார்கள் பெறப்பட்டு வருகின்றன. கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்படாத பெண் நாய் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு இருமுறை கருவுற்று, சுமார் 10 குட்டிகள் வரை ஈனும் வாய்ப்புள்ளது என்பதால், அதிகளவில் நாய்கள் பெருக்க உருவாகிறது. எனவே, பெண் நாய்களை அதிக எண்ணிக்கையில் பிடித்து அவற்றிற்கு அறுவை சிகிச்சை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான ஆண்கள் கோகோ போட்டி



ஈரோடு செப் 17 பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான ஆண்கள் கோகோ டி பிரிவு போட்டியானது 12 9 25 அன்று கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரியில் நடைபெற்றது

போட்டிகளில் ஈரோடு மற்றும் சத்தியமங்கலம் பகுதிகளில் உட்பட்ட கல்லூரியில் இருந்து சுமார் 15க்கும் மேற்பட்ட அணிகள் பங்கு பெற்றனர் இப்ப போட்டிகளில் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் எம் கே பழனிச்சாமி மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் பி காமராஜ் போட்டிகளை துவக்கி வைத்தனர்

முன்னதாக கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் த எஸ் பிரபு வரவேற்றார். இப் போட்டிகளில் பரிசளிப்பு விழாவானது கல்லூரியின் கருத்தரங்க கூடத்தில் நடைபெற்றது பரிசளிப்பு விருந்தினராக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மொடக்குறிச்சி உடற்கல்வி இயக்குனர் போ பாலமுருகன் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். முதல் பரிசு வெள்ளாளர் கலை அறிவியல் கல்லூரி ஈரோடு இரண்டாம் இடத்தின் கோபி கலை அறிவியல் கல்லூரி கோபிசெட்டிபாளையம் மூன்றாவது பரிசினை கொங்கு கலை அறிவியல் கல்லூரி ஈரோடு நான்காவது பரிசினை ஈரோடு கலை அறிவியல் கல்லூரி அணியினர் பெற்றனர்



திண்டல்மலை நகர கூட்டுறவு கடன் சங்கம் நடத்தும் வீரப்பம்பாளையம் ஈரோடு கிழக்கு சட்டமன்றஉறுப்பினர்தொகுதிமேம்பாட்டுத்திட்டத்தில்ரூ.20லட்சம்மதிப்பீட்டில்கட்டப்பட்ட முழுநேர நியாயவிலைக்கடையின் கட்டிடத்தை மேயர் நாகரத்தினம் சுப்ரமணியம் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா,துணைப்பதிவாளர்(பொதுவிநியோகத்திட்டம்)சு.மாதேஸ்கலந்துகொண்டனர்.

மொடக்குறிச்சி வட்டாரத்தில்

# மண்புழு உரம் தயாரித்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



ஈரோடு செப் 17- மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மை உழவர் நலத்துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டு கலைஞர் திட்ட கிராமங்களான கனகபுரம் கிராமத்தில் உள் மாவட்ட அளவில் மண்புழு உரம் தயாரித்தல் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மொடக்குறிச்சி .க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், க.பிரசாத் தலைமை தாங்கி உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் நெல் சாகுபடி முறைகள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.

வேளாண்மை துணை இயக்குநர் குழந்தைவேல், மண்புழு உரம் தயாரிக்கும் முறை, அதன் நன்மைகள் குறித்து தெளிவாக பயிற்சியளித்தார். மொடக்குறிச்சி துணை வேளாண்மை அலுவலர், பத்மநாபன், வேளாண்மை உழவர் நலத்துறை மானியத்திட்டங்கள் குறித்து விளக்கினார். .

மொடக்குறிச்சி தோட்டக்கலை அலுவலர், வெற்றிவேல், தோட்டக்கலை மானியத்திட்டங்கள் மற்றும் தென்னை மஞ்சள் பயிரையைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்கள் குறித்து எடுத்துரைத்தார். மொடக்குறிச்சி வட்டார தொழில்நுட்ப மேலாளர், அ.பிரதீப்குமார் உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார்.

செல்வி. பொ.லட்சுமி உதவி தொழில்நுட்ப மேலாளர் விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார். மொடக்குறிச்சி வேளாண் வணிகம் வேளாண் விற்பனை மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்,செல்வி.புனிதா, வணிகத் துறை மானியத் திட்டங்கள் குறித்து கூறினார்

மொடக் குறிச்சி உதவி தோட்டக்கலை அலுவலர், . செல்வி.மைதிலி, நன்றி கூறினார் பயிற்சி முடிவில் இலவச காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ஈஷா காவேரி கூக்குரல் இயக்கத்தினர் சார்பில் மரம் நடும் நிகழ்வு



ஈரோடு செப் 17- முன்னோடி மர விவசாயி மரம் தங்கசாமி அவர்களின் நினைவு நாளான செப்டம்பர் 16ம் தேதியை முன்னிட்டு ஈஷா காவேரி கூக்குரல் சார்பாக தமிழகம் முழுவதும் விவசாய நிலங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டது இதன் ஒரு பகுதியாக பெருந்துறை தாலுக்கா பொன்முடி மேட்டுப்பாளையம் கிராமம் விவசாயி யசோதா என்பவரது தோட்டத்தில் 2500 மரக்கன்றுகள் நடப்பட்டன இந்த நிகழ்ச்சியில் தமிழக இந்து மக்கள் முன்னணி நிறுவனத் தலைவர் த எஸ் கே தமிழ்செல்வம் கலந்து கொண்டு முதல் மரக்கன்று நட்டு விழாவினை துவக்கி வைத்தார் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஈரோடு ஈஷா காவேரி கூக்குரல் இயக்கத்தினர் செய்திருந்தனர்

# புரட்டாசி மாதப் பிறப்பு: பெருமாள் கோவில்களில் முன்னேற்பாடுகள் தீவிரம்

ஈரோடு, செப்.17– புரட்டாசி மாதம், பெருமாளுக்கு உகந்த மாதம். இம்மாதங்களில் வரும் சனிக்கிழமைகளில், பக்தர்கள் விரதம் கடைபிடிப்பது வழக்கமாக உள்ளது. மேலும், பெருமாள் கோவில்களுக்கு சென்று வழிபடுவது வழக்கமாகும்.

முதல் வார சனிக்கிழமை முதல் நான்கு வாரங்களுக்கு, பெருமாள் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். அதன்படி, வரும் சனிக்கிழமை புரட்டாசி மாதத்தின் முதல் சனிக்கிழமையாகும். இதனையொட்டி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருமாள் கோயில்களில், முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஈரோடு கோட்டை கஸ்தூரி அரங்கநாதர், அக்ரஹாரவீதி அய்யர் பெருமாள் கோயில், காவிரிக்கரை ஆதவன் மாதவன் கோயில், கோபி ஸ்ரீதேவி பூதேவி சமேத வரதராஜ பெருமாள் கோயில், பாரியூர் ஆதிநாராயண பெருமாள் கோயில், புன்செய்புளியம்பட்டியில் உள்ள பிரசித்தி பெற்ற கரிவரதராஜ பெருமாள் கோயில் உள்ளிட்ட பல்வேறு கோயில்களில், முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக, ஈரோடு– பவானி சாலையில் உள்ள 1,500 ஆண்டுகள் பழமையான பெருமாள் மலைக்கு, புரட்டாசி சனிக்கிழமைகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்பதால், முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
குன்னூர்
ரத்னகுமார்,
த.பெ.தாஸ் கிறிஸ்டி,
தோடா காலனி,
அண்ணாநகர்,
கேத்தி அஞ்சல், குன்னூர்
தாலுகா, நீலகிரி மாவட்டம்.
-----மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர் அவர்கள்,
குன்னூர்.
-------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
எனது தாத்தா எம்மோத்தி த.பெ. பீர்நீர் கடந்த 24.07.1998 மேற்கண்ட முகவரியில் இறந்துவிட்டார். அவரது இறப்பை பதிவு செய்ய தவறிவிட்டோம். அவரது இறப்பு சான்றிதழ் கேட்டு குன்னூர்னூனூர் உதகமண் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன். இது குறித்து யாருக்காவது ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 10 நாட்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
ரத்னகுமார்,
மனுதாரர்.

# 4 காவலர்கள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்

சென்னை செப் 17- சென்னையில் பணியில் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட 4 காவலர்கள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை சௌகார்பேட்டை நகை வியாபாரியிடம் பணியாற்றும் இளைஞரிடம் ரூ.10 லட்சம், 150 கிராம் தங்கம் பறிமுதல் செய்தனர். உரிய ஆவணம் தந்ததும் ரூ.25,000 வாங்கிக் கொண்ட மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசார். பணம், நகை பறிமுதல் விவகாரம் சட்டம்-ஒழுங்கு போலீசுக்கு தெரிந்ததும் ரூ.25,000 வியாபாரியிடமே ஒப்படைத்தனர். பணியில் ஒழுங்கீனமாக இருந்த புகாரில் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசார் 4 பேர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டனர்.

**PUBLIC NOTICE**
Take notice that my client R. MANJULA has filed an application before RDO, Udhagamandalam under Section 13(3)of Registration of Births and Deaths Act, 1969, read with Rule 9(3) of the Tamilnadu Registration of Births and Deaths Rules, 2000 to Register the death of her father in law namely Mr.THATHAN, Son of Mr. Hirian died on 04-05-2023 at 3/80 Ithalar Village, Ithalar Post, Kundah Taluk, The Nilgiris.
J.H.MAHESWARI, B.A.L., LL.B.,
Advocate/Notary Public,
Udhagamandalam, The Nilgiris.

**PUBLIC NOTICE**
Take notice that my client SANDHIYA.R has filed an application before RDO, Udhagamandalam under Section 13(3)of Registration of Births and Deaths Act, 1969, read with Rule 9(3) of the Tamilnadu Registration of Births and Deaths Rules, 2000 to Register her birth namely Mrs. SANDHIYA.R Daughter of Mr. Rajkumar born on 23-05-1994 at Door No.25/12G, Wood brook, TR Bazaar, Naduvattam, Gudalur Taluk, The Nilgiris.
J.H.MAHESWARI, B.A.L., LL.B.,
Advocate/Notary Public,
Udhagamandalam, The Nilgiris.

நீலகிரி மாவட்ட தையற் மகளிர் மேம்பாட்டு குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கம் S.W.41.
உதகை.
**பேரவை கூட்ட அறிவிப்பு**
அன்புடையீர் வணக்கம்,
S.W.41.நீலகிரி மாவட்ட தையற் மகளிர் மேம்பாட்டு குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கம், உதகை சங்கத்தின் பேரவைக் கூட்டம் எதிர்வரும் 24.09.2025 புதன்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மைய அரங்கில் நடைபெற உள்ளது. அதுசமயம் உறுப்பினர்கள் அனைவரும் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
பொருள்
1. சங்கத்தின் 2021-2022ம் ஆண்டின் இறுதி தணிக்கை அறிக்கையினை அங்கீகரித்தல் மற்றும் நிகர லாபத்தினை தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988-ன் படி இலாபப் பிரிவினை செய்தல்.
2. சங்கத்தின் 2022- 2023ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு அங்கீகரித்தல்.
3. சங்கப் பேரவை கூட்டத்தில் கொண்டு வரும் இதர தீர்மானங்கள்.
இடம்: உதகை,
நாள்: 17.09.2025
செயலர்/தலைவர்
145-NILCOPUB- OOTY

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர்: முதல் அணியாக

# சூப்பர் 4 சுற்றை உறுதி செய்தது இந்தியா



**அபுதாபி, செப். 17-**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் முதல் அணியாக சூப்பர் 4 சுற்றை உறுதி செய்துள்ளது இந்திய அணி.

**8 அணிகள்...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (20 ஓவர்) ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஓமன், ஐக்கிய அரபு அமீரக அணிகளும், 'பி' பிரிவில் இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் 'டாப்-2' இடங்களை பிடிக்கும் அணிகள் 'சூப்பர் 4' சுற்றுக்கு முன்னேறும்.

**7-வது லீக் ஆட்டம்....**

இதில் அபுதாபியில் மாலை நடந்த 7-வது லீக் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகம் (யு.ஏ.இ.), அறிமுக அணியான ஓமனை (ஏ பிரிவு) எதிர்கொண்டது. இதில் முதலில் பேட் செய்த ஐக்கிய அரபு அமீரக அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 172 ரன்கள் சேர்த்தது. தொடக்க ஆட்டக்காரர்களான அலிஷான் ஷராபு (51 ரன், 38 பந்து, 7 பவுண்டரி, ஒரு சிக்சர்), கேப்டன் முகமது வாசிம் (69 ரன், 54 பந்து, 6 பவுண்டரி, 3 சிக்சர்) அரைசதம் அடித்தனர். பின்னர் ஆடிய ஓமன் 18.4 ஓவர்களில் 130 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. இதனால் ஐக்கிய அமீரகம் 42 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அமீரகம் தரப்பில் ஜூனைத் சித்திக் 4 விக்கெட்டும், ஹைதர் அலி, முகமது ஜவாதுல்லா தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

**ஐக்கிய அரபு அமீரகம்...**

2-வது ஆட்டத்தில் ஆடிய ஐக்கிய அரபு அமீரக அணி பெற்ற முதல் வெற்றி இது வாகும். ஓமனுக்கு 2-வது தோல்வியாகும். இதன் மூலம் ஏ பிரிவில் 4 புள்ளிகளை பெற்றுள்ள இந்திய அணி நடப்பு ஆசிய கோப்பையில் முதல் அணியாக சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறியுள்ளது. 2 போட்டிகளில் விளையாடி 2-லும் வெற்றி பெற்று நல்ல ரன்ரேட்டை (+4.793) கொண்டுள்ள இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் தோல்வியடைந்தாலும் முதல் 2 இடங்களில் இருக்கும். இதன் காரணமாக இந்திய அணி சூப்பர் 4 சுற்று வாய்ப்பை அதிகாரபூர்வமாக உறுதி செய்துள்ளது.

**பாகிஸ்தான் அணியுடன்...**

மறுபுறம் பாகிஸ்தான் மற்றும் யு.ஏ.இ. அணிகள் முறையே 2 போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றி கண்டுள்ளன. இந்த சூழலில் துபாயில் நாளை நடைபெறும் தனது கடைசி லீக் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரக அணி, பாகிஸ்தானுடன் மோதுகிறது. இதில் வெற்றி காணும் அணி 'ஏ' பிரிவில் இருந்து 2-வது அணியாக அடுத்த சுற்றுக்குள் அடியெடுத்து வைக்கும். ஓமன் அணி அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து வெளியேறியது.

2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல்:

# தமிழக பா.ஜ.க. முக்கிய ஆலோசனை



**சென்னை, செப். 17-**

வருகிற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழக பா.ஜ.க. தலைவர்கள் முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டில் பா.ஜ.க.- அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்க உள்ளது. இந்த சூழ்நிலையில் கட்சியின் அமைப்பு பொதுச்செயலாளர் பி.எல்.சந்தோஷ் தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளுடன் ஆலோசிப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பா.ஜ.க.வில் இருப்பவர்களுக்கு அரசியல், சமூக ரீதியாக பிரச்சனைகளை எதிர்கொள்வது எப்படி? கட்சியை பலப்படுத்தி சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசியல் களத்தை சந்திப்பது எப்படி? என்பது உள்பட பல்வேறு செயல்கள் பற்றி விவாதித்து ஆலோசனைகள் வழங்கப்படும். சிந்தன்பைடெக் (சிந்தனை அரங்கம்) என்ற பெயரில் இந்த நிகழ்ச்சியை ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் நடத்துவார்கள். ஆண்டுக்கு ஒரு முறையாவது நடத்தப்படும் இந்த நிகழ்ச்சி கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நடைபெறவில்லை.

இந்த நிலையில் இந்த சிந்தனை அமர்வு நிகழ்ச்சி தமிழ்நாட்டில் நேற்று நடத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சி மாமல்லபுரத்தில் உள்ள அரங்கத்தில் நேற்று காலை 9 மணிக்கு தொடங்கியது. பா.ஜ.க.வின் அமைப்பு பொதுச்செயலாளர் பி.எல்.சந்தோஷ் முன்னிலையில் விவாதம் நடந்து வருகிறது. கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய மந்திரி எல்.முருகன், அண்ணாமலை, மாநில பொறுப்பாளர்கள் அரவிந்த் மேனன், சுதாகர் ரெட்டி, பொன்.ராதாகிருஷ்ணன், டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், எச்.ராஜா, அமைப்புச் செயலாளர் கேசவ விநாயகன், கரு.நாகராஜன் மற்றும் பா.ஜ.க. மாநில துணை தலைவர்கள், செயலாளர்கள், 7 அணிகளின் தலைவர்கள், அணி பிரிவுகளின் பொறுப்பாளர்கள் 25 பேர், முக்கிய நிர்வாகிகள் என சுமார் 70 பேர் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தார்கள். கூட்டம் நடைபெறும் அரங்குக்குள் செல்போன் கொண்டு செல்ல அனுமதி இல்லை. காலை தொடங்கிய இந்த கூட்டம் இரவு வரை நடக்கிறது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாட்டின் தற்போதைய அரசியல் சூழல், கூட்டணிக்குள் ஏற்படும் குழப்பங்கள், மக்கள் மனநிலை அமைப்பு ரீதியாக கட்சியின் நிலை, தேர்தல் பிரசாரத்தை எவ்வாறு முன்னெடுப்பது, தேர்தல் வெற்றிக்கான வழிமுறைகள் மற்றும் கூட்டணியை வலுப்படுத்துவது என்பது உள்பட 10-க்கும் மேற்பட்ட தலைப்புகளில் மூத்த தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை முன் வைத்தார்கள். ஒவ்வொருவரும் பேசி முடித்ததும் அதன் மீது விவாதம் நடந்தது. இந்த விவாதத்தில் கருத்துக்களை சொல்ல யாருக்கும் எந்த கட்டுப்பாடும் கிடையாது.

இந்த அமர்வின் போது அவ்வப்போது தேனீர் இடைவேளை மட்டும் விடப்படும். இந்த கூட்டத்தில் அமைப்பு ரீதியாக கட்சி வலுப்படாமல் இருப்பதற்கு நிர்வாகிகளிடையே நிலவும் கோஷ்டி பூசல்கள், கட்சியை விட தங்கள் சுயநலத்தின் மீது கொண்டுள்ள அக்கறை உள்ளிட்ட சில முக்கிய காரணங்கள் உள்ளன. இதுபற்றி எடுத்துச் சொல்லப்போவதாக கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். நாள் முழுவதும் அனைவரது கருத்துக்கள், சிந்தனைகள், ஒவ்வொரு பிரச்சனைக்கும் அவர்கள் முன்வைக்கும் ஆலோசனைகள், எதிர்பார்ப்பது பற்றிய விவரங்களை பி.எல். சந்தோஷ் கேட்கிறார்.

நிறைவாக மாலை 6 மணியளவில் அவர் ஆலோசனை வழங்குகிறார். அப்போது அரசியல் ரீதியாக கட்சியினர் என்ன மாதிரி நடந்து கொள்ள வேண்டும். கட்சி அமைப்பை பலப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கட்சி கட்டுப்பாடு, தேர்தல் நேரத்தில் கூட்டணிக்கு இணக்கமாக செயல்படுவது உள்ளிட்ட விஷயங்களில் பா.ஜ.க.வினர் நடந்து கொள்ள வேண்டிய விதங்கள் பற்றி எடுத்துரைப்பார் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணியில் குழப்பங்கள் நடந்து வரும் நிலையில் நேற்று இந்த கூட்டம் நடப்பதால் கட்சி மேலிடத்தின் முடிவு பற்றியும் அவர் விரிவாக விளக்கம் அளிப்பார் என்று கூறப்படுகிறது.

தமிழ்நாட்டிற்கு தற்போது தேவையான

# 1.54 லட்சம் டன் உரங்களை உடனே வழங்க வேண்டும்

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்



**சென்னை, செப். 17-**

தமிழ்நாட்டின் தற்போதைய காரிப் மற்றும் எதிர்வரும் ராபி பருவத்திற்கு, உரப் பற்றாக்குறையை தவிர்த்திடும் வகையில், தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய 27,823 மெட்ரிக் டன் யூரியா, 15,831 டன் டிஏபி, 12,422 டன் எம்ஓபி மற்றும் 98,623 டன் என்பிகே காம்ப்ளக்ஸ் உரங்களை (மொத்தம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 699 டன்) உடனடியாக வழங்கிடத் தேவையான அறிவுரைகளை இரசாயன மற்றும் உர அமைச்சகத்திற்கு வழங்கிடுமாறு பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழகத்திற்கு வழங்க வேண்டிய உரங்களை விரைந்து வழங்க பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் உரப் பற்றாக்குறையை தவிர்த்திட தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய உரங்களை விரைந்து வழங்கிட நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் மோடிக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் முக்கியமான நெல் உற்பத்தி மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். மாநிலத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. விவசாய உற்பத்தியை அதிகரிக்க ஊக்கமளிக்கும் வகையில் குறிப்பான பகுதிக்கு ஏற்ப திட்டங்களை செயல்படுத்திவருகிறது. அத்துடன், தேவையான வேளாண் இடுபொருட்கள் கிடைப்பதையும் சீராக கண்காணித்தும் வருகிறது.


பருவமழை முன்கூட்டியே தொடங்குவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் 2025 ஜூன் மாதம் முதல் காரிப் பருவத்தில் நெற்பயிர் முழுவீச்சில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி, 5.661 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தில் பயிரிடப்பட்ட 5.136 லட்சம் ஹெக்டேர் பரப்பளவைவிட 0.525 லட்சம் ஹெக்டேர் (10%) அதிகமாகும். இதனால் மாநிலம் முழுவதும் நேரடி உரங்களுக்கு அதிக தேவை நிலவுகிறது.

மாநிலத்தில் பெய்துவரும் பரவலான மழை மற்றும் முக்கிய நீர்த்தேக்கங்களில் தண்ணீர் போதுமான அளவில் உள்ளதன் காரணமாக, விவசாய உற்பத்திக்குத் தேவைப்படும் யூரியா, டிஏபி, எம்ஓபி மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களை உற்பத்தியாளர்களால் மத்திய அரசின் வழங்கல் திட்டத்தின்படி 2025 ஏப்ரல் முதல் 2025 ஆகஸ்ட் வரை வழங்கிடவில்லை. மேலும் அவர்களால் மொத்த ஒதுக்கீட்டில் சுமார் 57 விழுக்காடு அளவிற்கு மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள முதல்வர் நிறுவனவாரியாக இதுவரை உரங்கள் வழங்கப்பட்ட விவரங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டின் தற்போதைய காரிப் மற்றும் எதிர்வரும் ராபி பருவத்திற்கு, உரப் பற்றாக்குறையை தவிர்த்திடும் வகையில், தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய 27,823 மெட்ரிக் டன் யூரியா, 15,831 டன் டிஏபி, 12,422 டன் எம்ஓபி மற்றும் 98,623 டன் என்பிகே காம்ப்ளக்ஸ் உரங்களை (மொத்தம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 699 டன்) உடனடியாக வழங்கிடத் தேவையான அறிவுரைகளை இரசாயன மற்றும் உர அமைச்சகத்திற்கு வழங்கிடுமாறு பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய கோப்பை கிரிக்கெட்:

# இலங்கை, யு.ஏ.இ. வெற்றி



**அபுதாபி, செப். 17-**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் திங்கட்கிழமை நடந்த 2 போட்டிகளில் இலங்கை, யு.ஏ.இ. வெற்றிபெற்றன. அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து ஓமன் வெளியேறியது.

**பந்துவீச்சு தேர்வு...**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் இலங்கை-ஹாங்காங் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்ற இலங்கை பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி ஹாங்காங் அணியின் ஜீஷன் அலி, அன்ஷி ராத் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ஜீஷன் அலி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த, ராத் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஜீஷன் அலி 17 பந்தில் 23 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பாபர் ஹயாத் 4 ரன்னில் வெளியேறினார்.

**நிசாகத்கான் அபாரம்...**

3-வது விக்கெட்டுக்கு அன்ஷி ராத் உடன் நிசாகத் கான் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அன்ஷி ராத் 46 பந்தில் 48 ரன்கள் எடுத்து அரைசதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். மறுமுனையில் நிசாகத் கான் சிறப்பாக விளையாடி 36 பந்தில் அரைசதம் விளாசினார். இந்த ஜோடி 3அவது விக்கெட்டுக்கு 61 ரன்கள் சேர்த்தது. இறுதியாக ஹாங்காங் அணி 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 149 ரன்கள் அடித்துள்ளது.

**இலங்கை வெற்றி...**

150 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை பேட்டிங் செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய பதும் நிஷாங்கா அதிரடியாக விளையாடி அரைசதமடித்தார். அவர் 68 ரன்களில் ஆட்டம் இழக்க அடுத்தடுத்து களமிறங்கியவர்கள் அணிக்கு தங்களது பங்களிப்பை செய்தனர். இறுதியில் இலங்கை அணி 18.5 ஓவர்களில் இலக்கை கடந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**172 ரன்கள் குவிப்பு...**

மற்றொரு போட்டியில் ஐக்கிய அரபு அமீரகம்-ஓமன் அணிகள் மோதின. முதலில் விளையாடிய ஐக்கிய அரபு அமீரகம் 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 172 ரன்கள் குவித்தது. தொடக்க வீரர்களான அலிஷான் ஷரபு- கேப்டன் முகமது வாசிம் ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 11 ஓவரில் 88 ரன்கள் குவித்த போது இந்த ஜோடி பிரித்தது. ஷரஃபு 38 பந்தில் 51 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

**வீரர்கள் தடுமாற்றம்...**

வாசீம் 54 பந்தில் 69 ரன்கள் விளாசினார். முகமது சோகைப் 13 பந்தில் 21 ரன்களும், ஹரிஷித் கவுசிக் ஆட்டமிழக்காமல் 19 ரன்களும் விளாசினர். ஓமன் அணியின் ஜித்தன் ராமநந்தி 2 விக்கெட் வீழ்த்தினார். பின்னர் 173 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஓமன் அணி களம் இறங்கியது. அந்த அணியின் தொடக்க வீரர் 10 பந்தில் 20 ரன்கள் அடித்து ஆட்டமிழந்தார். அதன்பின் 4 வீரர்கள் தொடர்ந்து ஒற்றை இலக்க ரன்னில் ஆட்டமிழந்தனர். இதனைத் தொடர்ந்து ஓமன் 18.4 ஓவரில் 130 ரன்கள் எடுத்து ஆல்அவுட் ஆனது. இதனால் ஐக்கிய அரபு அமீரகம் 42 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**தொடரில் இருந்து...**

ஐக்கிய அரபு அமீரகம் இரண்டு போட்டிகளில் விளையாடி ஒன்றில் வெற்றி பெற்றுள்ளது. ஓமன் இரண்டு போட்டிகளிலும் விளையாடி இரண்டிலும் தோல்வி கண்டு தொடரில் இருந்து வெளியேறியுள்ளது. இந்தியா 2 போட்டிகளில் இரண்டிலும் வெற்றி பெற்று முதல் இடத்தில் உள்ளது. பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளது. பாகிஸ்தான்- ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறும்.

# சேலத்தில் மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு அடையாள அட்டை

## துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்



**சேலம், செப். 17-**

சேலத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு அடையாள அட்டை மற்றும் வங்கி கடன் இணைப்பு வழங்கினார்.

சேலம் அருகே உள்ள கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு அடையாள அட்டை மற்றும் வங்கி கடன் இணைப்பு வழங்கும் விழா நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு அடையாள அட்டை மற்றும் வங்கி கடன் இணைப்பு வழங்கி பேசினார்.

அப்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:- இங்கு நடப்பது அரசு விழாவா? மகளிர் விழாவா? என்ற அளவிற்கு எழுச்சியோடு, மகிழ்ச்சியோடு வந்துள்ளீர்கள். இந்த விழாவிற்கு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் வந்துள்ளனர். அவர்கள் நம்முடைய இயக்கம் கிடையாது. நம்முடைய கூட்டணியில் கூட (இப்போது) கிடையாது.

சேலம் மேற்கு தொகுதி எம்.எல்.ஏ. அருண், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் சதாசிவம் ஆகிய இருவரும், சேலம் மாவட்டத்திற்கு தி.மு.க. அரசு பல்வேறு திட்டங்களை செய்து கொண்டிருக்கிறது. அதற்கு பாராட்டுகள் என போட்டி போட்டு கொண்டு பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் ஒற்றுமையாக பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். மக்கள் பணி ஆற்ற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

## வைஷாலிக்கு முதல்வர் வாழ்த்து



ஃபிடே கிராண்ட் ஸ்விஸ் தொடரை வென்று தமிழகத்தைச் சேர்ந்த செஸ் கிராண்ட் மாஸ்டர் வைஷாலி (24) அசத்தியுள்ளார். இதன்மூலம், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள கேன்டிடேட்ஸ் செஸ் தொடருக்கு அவர் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளார். சீன வீராங்கனை டான் ஸோங்கி உடனான 11 சுற்றுகள் நடைபெற்ற இறுதிப்போட்டியில், 8 புள்ளிகளைப் பெற்று தொடரை வென்றுள்ளார். இதன்மூலம் இரண்டாவது முறையாக கிராண்ட் செஸ் தொடரை வைஷாலி வென்று அசத்தியுள்ளார்.

இந்த நிலையில், கிராண்ட் சுவிஸ் செஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழக வீராங்கனை வைஷாலிக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற பிடே கிராண்ட் செஸ் தொடரில் தனது நிதானத்தாலும் அபார ஆட்டத்தாலும் வென்று, வெற்றி மகுடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ள 'நம்ம சென்னைப் பொண்ணு' வைஷாலிக்கு எனது பாராட்டுகள். இதன் மூலம் அவர் பெருமதிப்பு கொண்ட கேண்டிடேட்ஸ் (பெண்கள் பிரிவு) தொடருக்கும் தகுதிபெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இது வைஷாலியின் தனிப்பட்ட சாதனை மட்டுமல்ல, சென்னையின் வெற்றி, தமிழ்நாட்டுக்குக் கிடைத்த வெற்றி! இதைப் பார்த்து, உலக அரங்கில் நம்மாலும் நமது கனவுகளை நனவாக அரங்கேற்ற முடியும் என ஊக்கம் பெறும் எண்ணற்ற இளம்பெண்களின் வெற்றி" என்று தெரிவித்துள்ளார்.

## பாக்.கின் கோரிக்கை நிராகரிப்பு..?

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் ஐ.சி.சி. பொது மேலாளர் வாசிம் கானுக்கு கடிதம் எழுதியுள்ளது. அதில் ஆசிய கிரிக்கெட்டுக்கான போட்டி நடுவர் பணியில் இருந்து ஆன்டி பைகிராப்ட்டை உடனடியாக நீக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளது. மேலும் அவரை நீக்காவிட்டால் எஞ்சிய ஆசிய போட்டியில் இருந்து விலகிவிடுவோம் என பாகிஸ்தான் மிரட்டல் விடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் போட்டி நடுவர் பைகிராப்ட்டை மாற்ற வேண்டும் என்ற பாகிஸ்தான் வாரியத்தின் கோரிக்கையை ஐ.சி.சி. நிராகரிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. பாகிஸ்தான் வாரியத்தின் கோரிக்கையை ஏற்க போதுமான காரணங்கள் இல்லை என ஐ.சி.சி. கருதுகிறது. மேலும் கைகுலுக்கும் சம்பவத்தில் பைகிராப்ட் குறைந்தபட்ச பங்கை மட்டுமே கொண்டிருந்தார் என்பதும், டாஸில் ஒரு கேப்டன் மற்றொரு கேப்டனுடன் கைகுலுக்க மறுத்தால் ஏற்படும் பொது சங்கடத்தைத் தவிர்க்கவே அவர் இதனை செய்திருக்கலாம் என்றும் ஐ.சி.சி. கருதுகிறது. எனவே இந்த விவகாரத்தில் ஐ.சி.சி., போட்டி நடுவர் ஆன்டி பைகிராப்ட்டுக்கு சாதகமான முடிவை எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆன்லைன் சூதாட்ட செயலி பண மோசடி:

# 2 இந்திய முன்னாள் வீரர்களுக்கு சம்மன்

**புதுடெல்லி, செப். 17-**

'ஓன்எக்ஸ்பெட்' என்ற பந்தய செயலியுடன் தொடர்புடைய வழக்கின் விசாரணையின் பகுதியாக அமலாக்க இயக்குநரகம் இவர்களுக்கு சம்மன் அனுப்பியுள்ளது.

**சட்டவிரோத செயலிகள்...**

ஆன்லைன் சூதாட்ட செயலி பண மோசடி வழக்கில் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்களான யுவராஜ் சிங் மற்றும் ராபின் உத்தப்பா ஆகியோருக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பி உள்ளது. சூதாட்ட செயலியை விளம்பரப்படுத்துவதன் மூலம் பெரிய அளவிலான பரிவர்த்தனைகள் செய்யப்பட்டதா மற்றும் அது பணமோசடியுடன் தொடர்புடையதா என்ற கோணத்தில் அமலாக்கத்துறை விசாரித்து வருகிறது. மேலும் முதலீட்டாளர்களை கோடிக்கணக்கான ரூபாய் ஏமாற்றி கணிசமான வரிகளை ஏய்ப்பு செய்ததாக சந்தேகிக்கப்படும் சட்டவிரோத சூதாட்ட செயலிகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

**யுவராஜ், உத்தப்பா...**

அந்த வரிசையில் தற்போது 'ஓன்எக்ஸ்பெட்' என்ற சட்டவிரோத பந்தய செயலியுடன் தொடர்புடைய பணமோசடி வழக்கின் விசாரணையின் பகுதியாக அமலாக்க இயக்குநரகம் யுவராஜ் மற்றும் ராபின் உத்தப்பாவுக்கு சம்மன் அனுப்பியுள்ளது. இந்த நிறுவனம் தொடர்பான விளம்பரங்களில் இருவரும் தோன்றியதால் அவர்களுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது. அதன்படி ராபின் உத்தப்பாவை வருகிற 22-ம் தேதியும், யுவராஜ் சிங்கை 23-ம் தேதியும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக ஏற்கனவே இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்களான சுரேஷ் ரெய்னா மற்றும் ஷிகர் தவானை அமலாக்கத்துறை விசாரித்திருந்தது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# இந்தி மொழியைத் திணிக்கும் முயற்சியை மத்திய அரசு கைவிட வேண்டும்: த.வெ.க.



**சென்னை, செப். 17-**

இந்தியைத் திணிப்பதில் மத்திய பா.ஜ.க. அரசு தொடர்ந்து தோல்வி கண்டபோதிலும், விடாமல் இந்தியைத் திணிக்க முயன்று வருகிறது.

தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருக்கும் ஒரு தேசத்தில், 22 அலுவல் மொழிகளைக் கொண்டிருக்கும் அரசின் நிர்வாகத்தில் ஒற்றை மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது எதேச்சதிகாரப் போக்காகும்.

மத்திய அரசு நிர்வாகத்தின் அச்சாணியாக இந்தியை மாற்றுவதே லட்சியம் என்று கூறுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது ஆகும். இந்தியைத் திணிப்பதில் மத்திய பா.ஜ.க. அரசு தொடர்ந்து தோல்வி கண்டபோதிலும், விடாமல் இந்தியைத் திணிக்க முயன்று வருகிறது. மத்திய அரசின் நிர்வாகத்தில் அலுவல் மொழியாக 22 மொழிகள் இருக்கும்போது, இந்தியை மட்டுமே தொழில்நுட்பம், அறிவியல், நீதி, கல்வி மற்றும் நிர்வாகத்தின் அச்சாணியாக மாற்ற நினைப்பது எதேச்சதிகாரப் போக்கு. மத்தியத்தை ஆளும் அரசானது, நாட்டிலுள்ள அத்தனை மதத்தினரையும் மொழியினரையும் மாநிலத்தவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். இதுவே நாட்டின் ஒட்டு மொத்தப் பகுதிகளும் வளர்ச்சி அடைவதற்கான வழி ஆகும். இந்தி பேசாத மாநிலங்கள், பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் என்று பிரித்துப் பார்ப்பதும், ஒற்றை மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதும் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானவை. எனவே கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான இந்தி மொழியைத் திணிக்கும் முயற்சியை மத்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசு நிர்வாகத்தின் அச்சாணியாக இந்தியை மாற்றுவதே லட்சியம் என்ற தன் கருத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரும்பப் பெற வேண்டும் என்றும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் அவர்களின் ஒப்புதலோடு வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சினிமா CINI செய்திகள்

## 'நாகரிகப்பயணம்' படத்தின் இசை வெளியீட்டு விழா





RICH மற்றும் DSK மூவிஸ் இணைந்து வழங்க, தாஸ் சடைக்காரன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் நாகரிகப் பயணம் படத்தின் இசை மற்றும் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் தயாரிப்பாளர் P.மணவாளவன் A. செந்தில், புதுவை M.ஜாகீர் உசேன், இயக்குநர் ராதா பாரதி, ஜாகுவர் தங்கம், ஈகை கருணாகரன் இசை அமைப்பாளர் திவாகர், காண்டியப்பன், அன்னகொடி கன்னன், வர்ணிகா, முபாரக் அலி, ரஜினி காந்த் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் தயாரிப்பாளர் ஜாகிர் உசேன் பேசுகையில், இன்னும் 25 வருடங்களுக்கு பிறகு அரிசி இருக்காது, ஏனென்றால் விவசாயம் அழியும் நிலையில் உள்ளது, விவசாயத்தை சார்ந்த திரைப்படம் எடுக்கலாம் என்று இயக்குநர் தாஸ் சடைக்காரன் கூறியவுடன் மகிழ்ச்சியாக இப்படத்தை தொடங்கினோம் என்றார். படத்தின் இசை மற்றும் ட்ரெய்லரை ஏகலைவன் ஜாகுவார் தங்கம் வெளியிட படக்குழுவினர் பெற்றுக் கொண்டனர்.

## நாளை மறுநாள் வெளியாகும் 'தண்டகாரண்யம்'



லேர்ன் & டீச் புரொடக்ஷன் S.சாய் தேவானந்த், S. சாய் வெங்கடேஸ்வரன், நீலம் புரொடக்ஷன் தயாரிப்பில், இயக்குனர் அதியன் ஆதிரை இயக்கத்தில், தினேஷ், கலையரசன், ஷபீர், பால சரவணன், முத்துக்குமார், ரித்விகா,வின்சு, ஆகியோர்களது நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் "தண்டகாரண்யம்" நாளை மறு நாள் (இம்மாதம் 19-ஆம் தேதி) திரைக்கு வரவுள்ள இப்படத்தின், இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.விழாவில் படத்தின் இயக்குனர் அதியன் பேசியதாவது, பாரதியார் எழுதிய பாஞ்சாலி சபதத்தில் துச்சாதனன் திரௌபதியின் துகில் உறியும் பொழுது சுற்றி இருக்கக்கூடிய நபர்கள் என்ன செய்து கொண்டு இருந்தார்கள் என கேள்வி எழுந்தது. அதை கருப்பொருளாக வைத்துக் கொண்டு என்னுடைய இந்த படம் அமைந்திருக்கிறது. ஆதிக்க வர்க்கத்திற்கு எதிராக இந்தத் திரைப்படம் குரல் எழுப்பும் என்றார். தயாரிப்பாளரும் இயக்குனருமான பா.ரஞ்சித் பேசுகையில், நான் இயக்குனராக வரும்போது வெறும் 3 ஆண்டுகள் மட்டுமே இருப்பேன் என நினைத்தேன். ஏனெனில் நான் பேசக்கூடிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என நினைத்தேன். இருப்பினும் மக்கள் எங்களை ஏற்றுக் கொண்டனர். முன்பெல்லாம் இடதுசாரிகள் அதிகம் இருப்பார்கள் இருப்பினும் தற்பொழுது இருக்கக் கூடிய சென்சார் போர்டில் வலதுசாரிகள் அதிக அளவில் இருக்கிறார்கள். தொடர்ச்சியாக நீலம் ப்ரொடக்ஷனில் வேட்டுவம், பைசன் போன்ற படங்கள் வெளிவர இருக்கிறது.

அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து மூன்று திரைப் படங்கள் வெளிவர இருக்கிறது என்றார்.

### அருப்புக்கோட்டையில் அண்ணா பிறந்தநாள்:

## அ.தி.மு.க. சார்பில் நகரச்செயலாளர் சோலை. சேதுபதி மலர்தூவி மரியாதை



**அருப்புக்கோட்டை, செப். 17-**

அருப்புக்கோட்டையில் நகர அ.தி.மு.க. சார்பாக அண்ணாவின் 117-வது பிறந்தநாள் விழா நகர கழகச் செயலாளர் சோலை.சேதுபதி தலைமையில் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் போடம்பட்டி சங்கரலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

அருப்புக்கோட்டை பஜாரில் உள்ள அலங்கரிக்கப் பட்ட அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அ.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் வீர சுப்பிரமணியன், நகர அவை தலைவர் பம்பாய் மணி, திருச்சுழி தெற்கு ஒன்றிய செயலாளர் முத்துராமலிங்கம், வடக்கு ஒன்றிய செயலாளர் முனியாண்டி, மேற்கு ஒன்றிய செயலாளர் கருப்பசாமி, மாவட்ட கலை பிரிவு செயலாளர் சங்கர் குமார், இளைஞர் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் சக்கரவர்த்தி சங்கர், எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் முத்து, நகரப் பொருளாளர் செந்தமிழ் செல்வன்.

வடக்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் ராம் பாண்டியன், நகர எம்ஜிஆர் மன்ற செயலாளர் செல்வேந்திரன், சிறுபான்மை பிரிவு மாவட்டத் துணைச் செயலாளர் ராஜப்பன், மறவர் தெரு சத்திய ராஜன், நகர மீனவர் அணி செயலாளர் சிப்ஸ் முருகேசன், வெள்ளக் கோட்டை கலு சிவலிங்கம், நகர அம்மா பேரவை தலைவர் சவுண்டையா, மாவட்ட ஓட்டுனர் அணி துணைத் தலைவர் சரவணகுமார், விளையாட்டு வீரர்கள் அணி மாவட்ட தலைவர் லெனின், நகர அம்மா பேரவை செயலாளர் ராமர், வார்டு கழகச் செயலாளர்கள் தர்மர், சங்கர பாண்டியன், ஏ.ஜி.மாரிமுத்து, சண்முகவேல் தேவர், அண்டா கலு சிவலிங்கம், அன்பு நிதி, ஆட்டி சண்முக சுந்தரம், சித்தநாதன், ஜெயவேல் பாண்டியன், சின்னச்சாமி, ராமச்சந்திரன், வரதராஜ், தேவராஜ், சவுண்டப்பன், முத்துரத்தினம், அண்டா நாகராஜ், ராமச்சந்திர பிரபு, பரமசிவம், முத்து கிருஷ்ணன், பால்பாண்டி, ஈஸ்வரன், பந்தா பாண்டியன், வீர மணி, கோபாலகிருஷ்ணன், கணேசன், தர்மராஜ், சிவசுப்பிரமணியன், மணிகண்டன், செந்தில்குமார், எட்டப்பன், தங்கராஜ், வடை மாரிமுத்து, தங்கம், பிரசாத், திருவிருந்தால்புரம் கருப்பசாமி, ஜெயராஜ், சக்திவேல் முருகன், கோவிந்தராஜ், செல்வம், முத்துவேல், பொன்னுச்சாமி, கனகராஜ், நெல்சன் சுரேஷ் பால், விஜய் மல்லர், வீரமா மல்லன் மற்றும் மாவட்ட பிற அணி நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


நிகழ்ச்சி ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை நகர செயலாளர் சோலை சேதுபதி செய்திருந்தார்.

## 'யோலோ' திரைவிமர்சனம்



யுடியூப் சேனல் நடத்தும் நாயகன் தேவுக்கும், நாயகி தேவிகாவுக்கும் திருமணம் நடந்ததாக சிலர் கூறுகிறார்கள். தங்களுக்கே தெரியாமல் தங்களது திருமண எப்படி நடக்கும் என்பதால் அதிர்ச்சியடையும், நாயகனும், நாயகியும் அதன் பின்னணியை கண்டுபிடிக்க களத்தில் இறங்குகிறார்கள். அதை அவர்கள் எப்படி கண்டுபிடிக்கிறார்கள் என்பது தான் 'யோலோ படத்தின் கதை. நாயகன் தேவ் மற்றும் நாயகி தேவிகா இளமை துள்ளலோடு படம் முழுவதும் ஜொலித்திருக்கிறார்கள். விஜே நிக்கி, ஆகாஷ் பிரேம்குமார், கிரி துவாரகிஷ், படவா கோபி, யுவராஜ் கணேசன், ஸ்வாதி நாயர், பூஜா உள்ளிட்ட அனைவரும் சிறப்பாக நடித்து திரைக்கதை ஓட்டத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். சகிஷ்மா சேவியன் இசையில் பாடல்களும் அருமை. சூராஜ் நல்லுசாமியின் ஒளிப்பதிவில் படம் முழுவதும் கலர்புல்லாக பயணிக்கிறது. திரைக்கதை எழுதி இயக்கியிருக்கும் சாம்.எஸ், கதையை காமெடியாக சொல்ல முயற்சித்திருந்தாலும், திரைக்கதையில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி இருந்தால் படம் நிச்சயம் வெற்றி பெற்றிருக்கும்.

## 'உருட்டு உருட்டு' திரைவிமர்சனம்



எந்நேரமும் குடி குடி அலையும் நாயகன் கஜேஷ் நாகேஷ். குடியை விட்டுவிட வலியுறுத்தும் நாயகி ரித்விகா ஸ்ரேயா, காதலனை திருத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளும் நாயகி, இறுதியில் எதிர்பார்க்காத ஒரு செயலைச் செய்து அனைவரையும் அதிர்ச்சியில் உரைய வைக்கிறார். அது என்ன என்பதை சமூக அக்கறையோடும், நகைச்சுவையாகவும் சொல்லும் படமே உருட்டு உருட்டு. நாயகன் கஜேஷ் நாகேஷ், கதாபாத்திரத்திற்கு ஏற்றபடி கச்சிதமாக பொருந்தி நடித்திருக்கிறர். நாயகி ரித்விகா அழகாகவும் சிறப்பாகவும் நடித்திருக்கிறார். மொட்டை ராஜேந்திரன், அஸ்மிதா, ஹேமா, சின்னாளம்பட்டி சுகி, தயாரிப்பாளர் பத்ம ராஜு ஜெய்சங்கர், சேரன் ராஜ், மிப்பு நடேசன், அங்காடித்தெரு கருப்பையா, பாவா லட்சுமணன் ஆகியோர் தங்களின் அனுபவ நடிப்பைக் குறையின்றி செய்திருக்கிறார்கள். அருணகிரியின் இசையில் பாடல்கள் ஓகே.ரகம். எழுதி இயக்கியிருக்கும் பாஸ்கர் சதாசிவம், கிளைமாக்ஸ் மூலம் குடிமகன்களுக்கு ஒரு பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறார்.

## எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வரும் அர்ஜூன் தாஸ்



'கைதி' மற்றும் 'மாஸ்டர்' படங்களின் மூலம் வில்லத்தனத்தில் மிரட்டியவர் அர்ஜுன் தாஸ், 'போர்', 'ரசாவதி', 'அநீதி' போன்ற வித்தியாசமான கதைக்களம் கொண்ட படங்களில் ஹீரோவாக நடித்து கவனம் ஈர்த்தார். மேலும், அஜித்தின் 'குட் பேட் அக்லி' படத்தில் வில்லனாக நடித்தாலும், ஆட்டம், பாட்டம், ஆக்‌ஷன், நடிப்பு என தனது நவரச திறமையால் தமிழ் சினிமாவில் தனக்கென்று ரசிகர் வட்டத்தை உருவாக்கி வருகிறார். இந்நிலையில் அர்ஜுன் தாஸ், நடிப்பில் வெளியாகியுள்ள 'பாம்' திரைப்படம் பெரிய வரவேற்பை பெற்று வருகிறது. நகரம் சார்ந்த கதைக்களங்களில் நடித்து வந்த அர்ஜுன் தாஸ், முதல் முறையாக கிராம கதைக்களத்தில் நடித்திருக்கிறார். தொடர்ந்து வித்தியாசமான கதைக்களங்களில் நடித்து வரும் அர்ஜுன் தாஸின், கதை தேர்வு மற்றும் நடிப்பு ஆகியவற்றால், ரசிகர்கள் மட்டும் இன்றி தமிழ் திரையுலகமே அவரது அடுத்தடுத்த படங்கள் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## நத்தம் அருகே இரு பிரிவினரிடையே மோதல்: சிறுவன் உள்பட 6 பேர் கைது

**நத்தம், செப். 17-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே லிங்கவாடி கிழக்குதெருவை சேர்ந்தவர் வல்லரசு(25). இவர் கடந்த 14-ம் தேதி இரவு வடக்கு தெரு பகுதியில் பைக்கை வேகமாக ஓட்டி சென்றதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த வடக்கு தெருவை சேர்ந்த சரவணன்(20) என்பவர் ஏண்டா வண்டியை வேகமாக ஓட்டி செல்கிறாய் என்று கேட்டுள்ளார்.இதில் இரு பிரிவினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் இரு ஊரின் மந்தை முன்பு மோதலாக மாறியுள்ளது. இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசில் புகார் செய்தனர்.அதன்பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன், சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் ஆகியோர் வழக்குப் பதிவு செய்து இரு தரப்பை சேர்ந்த சரவணன் (20),சந்தோஷ்குமார் (19), செல்வராஜ்(21), காளீஸ்வரன் (20), கருப்பையா (22) 17 வயது சிறுவன் உள்பட 6 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கோபாலபுரத்தில் அண்ணா பிறந்தநாள் விழா:

## தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டோம்; அமைச்சர் தலைமையில் உறுதிமொழி ஏற்பு



**அருப்புக்கோட்டை, செப். 17-**

அருப்புக்கோட்டை அருகே கோபாலபுரத்தில் மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வருவாய்த்துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கலந்துகொண்டு அண்ணா திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும் அமைச்சர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் இணைந்து ஓரணியில் தமிழ்நாடு தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் அண்ணா பிறந்தநாள் விழா உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியதாவது:-

வட இந்திய மாநிலங்களை விட தமிழ்நாடு பல்வேறு துறைகளில் முன்னேறி இருக்கிறது. வட இந்தியாவில் பல இடங்களில் சாலை வசதி, தெரு விளக்குகள் வசதி குறைவு. அங்கு வேலை கிடைக்காமல் தான் வட மாநில இளைஞர்கள் இங்கு வேலைக்கு வருகின்றனர். இங்கு ஜாதி மதம் பேதம் இல்லாமல் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதற்கு காரணம் திராவிட கட்சிகள் தான்.என்று பேசினார். நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், ஒன்றிய கழகச் செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ் முன்னாள் கோபாலபுரம் பஞ்சாயத்து தலைவர் திரவியம் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து அருப்புக்கோட்டை நகர தி.மு.க. சார்பாக முன்னாள் முதலமைச்சர் அண்ணா துறையின் 117 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அருப்புக்கோட்டை பஜாரில் உள்ள அலங்கரிக்கப்பட்ட அண்ணா சிலைக்கு அருப்புக்கோட்டை முன்னாள் நகர மன்ற தலைவர் சிவப்பிரகாசம், நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, நகரக் கழகச் செயலாளர் ஏ.கே. மணி மற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாபுஜி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கோகுலன், மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஜான்சன், மாவட்ட பிரதிநிதி அன்பழகன், நகர விளையாட்டு மேம்பாட்டு அணி விஜயராகவன் மற்றும் நகர தி.மு.க. நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### டி.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றியத்தில் நலத்திட்ட உதவிகள்:

## மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் வழங்கினார்



**திருமங்கலம், செப். 17-**

முன்னாள் முதல்வர் கலைஞரின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலம் சட்ட மன்ற தொகுதியில் ஒன்றரை லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக 32 வது நாளான நேற்று மாலை டி.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றியம் குமாரபுரம், காட்டேரி, வி.அம்மாபட்டி ஆகிய கிராமங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு டி.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் நாகராஜ் முன்னிலை வகித்து வரவேற்றார்.

ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இவ்விழாக்களில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு தலைமையேற்று குமாரபுரம், கானேரி, வி.அம்மாபட்டி பகுதி மக்கள் 2 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கி சிறப்புரையாற்றினார். இதனை தொடர்ந்து நிகழ்வினில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு சிக்கன் பிரியாணியுடன் கூடிய அசைவ விருந்து மற்றும் கிராமப்புற கிரிக்கெட் குழுக்களுக்கு கிரிக்கெட் பேட், வாலிபால் மற்றும் விளையாட்டு உபகரணங்களை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார். முன்னதாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட கிராமங்களில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என பொது மக்கள் உறுதி மொழி ஏற்றனர்.

இவ்விழாவில் திருமங்கலம் தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன்,ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார், பாண்டியன், தங்கப்பாண்டி, முத்துராமன், தனசேகரன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், கிருத்திகா தங்கப்பாண்டி, பரமசிவம்,சிவனேசன், பாண்டி முருகன்,திருமங்கலம் நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான், பேரையூர் பேரூர் செயலாளர் வருசை முகமது, டி.கல்லுப்பட்டி பேரூராட்சி தலைவர் முத்துகணேசன், கட்சி நிர்வாகிகள் ஜெகதீஷ், சுரேஷ்,காளிதாஸ், மெப்கோ தொழிற்சங்க தலைவர் முத்துக்குமார், வக்கீல் கவிஸ்ரீ தினேஷ்,, கருவேலம்பட்டி வெற்றி வடக்கம்பட்டி ராதா கிருஷ்ணன், செல்வமணி செல்லச்சாமி, முத்து மற்றும் டி.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## வத்தலக்குண்டு அருகே உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**வத்தலக்குண்டு, செப். 17-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே உங்களுடன் .ஸ்டாலின் திட்ட முகாம் நடந்தது.வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் குன்னுவாரன்கோட்டைஊராட்சிக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் சாந்திபுரம் பிரிவருகே ஒரு தனியார் திருமண மஹாலில் நடந்தது.

தொடக்க விழாவுக்கு நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி தலைமை வகித்தார்.மாவட்ட ஊராட்சி செயலாளர் ஜெயச்சந்திரன், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குப்புசாமி, முருகேசன், , தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் கே.பி.முருகன், கனிக்குமார்,கனக துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கனிக்குமார் திட்டம் பற்றி விளக்கி பேசினார்.

துணை வட்டார வளர்ச்சி அலுவலர் புவனேஸ்வரி வரவேற்றார். முகாமில் வருவாய் ஆய்வாளர்கள் பரிமளம், வெண்ணிலா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சின்ன ராஜா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுமதி கிராம நிர்வாக அதிகாரி ஜமுனாமற்றும் வருவாய், மின்சாரம், வேளாண், சமூக நலம், கூட்டுறவு உள்ளிட்ட 15 துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் துறை ரீதியான மனுக்களை பெற்றுக் கொண்டு உடனுக்குடன் ஆன்லைன் மூலம் பதிவு செய்தனர்.

வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர் நாச்சியப்பன் முகாமினை தொகுத்து வழங்கினார்.முகாமில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வளர்மதி, தி.மு.க. நிர்வாகிகள்சகாப்தின், பொன்னம்பலம்,ரகு,ரமேஷ்துரை, ராதாகிருஷ்ணன்மற்றும்பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் குன்னு வாரன் கோட்டை ஊராட்சி செயலாளர் சுரேஷ் நன்றி கூறினார். பாதுகாப்பு ஏற்பாடுகளை விருவீடுபோலீசார் செய்திருந்தனர்.



● விடுதலை போராட்ட வீரரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ்.ராமசாமி படையாட்சியாரின் 108-வது பிறந்த நாளையொட்டி நேற்று சென்னை கிண்டியில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மா.சுப்பிரமணியன், மேயர் ஆர்.பிரியா, ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் உள்ளனர்.



● புதுடெல்லியில் நேற்று துணை ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள சி.பி.ராதாகிருஷ்ணனை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேரில் சந்தித்து அவருக்கு வாழ்த்து தெரிவித்தார். அருகில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம், திண்டுக்கல் சி.சீனிவாசன், அ.தி.மு.க. எம்.பி.க்கள் தம்பிதுரை, இன்பதுரை ஆகியோர் உடனிருந்தனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் பிரான்ஸ் நாட்டின் வால் டி லாயர் மாகாணத்துடன் கலாச்சார பரிமாற்றம் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் பிரான்ஸ் நாட்டு தூதர் எட்டியென் ரோலண்ட் பீக், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர் க.மணிவாசன் உடனிருந்தனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்கழகத்தின் சார்பில் கைத்திறத்தொழிலின் பங்களிப்பு, திறன் மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார். இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், துணிநூல் துறை செயலாளர் வே.அமுதவல்லி ஆகியோர் உள்ளனர்.

# டெல்லியில் துணை ஜனாதிபதியை...(1-ம் பக்க தொடர்ச்சி)

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு சென்றார். அவருடன் அ.தி.மு.க. மூத்த தலைவர்களான கே.பி. முனுசாமி. எஸ் பி வேலுமணி ஆகியோரும் சென்றனர்.

இந்தநிலையில், டெல்லியில் உள்ள துணை ஜனாதிபதி மாளிகையில் சி.பி.ராதாகிருஷ்ணனை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்தியாவின் துணை ஜனாதிபதியாக கொங்கு மண்டலத்தை சார்ந்த தமிழர் சி.பி. ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது தமிழகம் பெற்றுள்ள பெருமை என்று எடப்பாடி பழனிசாமி அவரிடம் தெரிவித்தார்.

எடப்பாடி பழனிசாமியுடன் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் முனுசாமி, பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி. வேலுமணி, நாடாளுமன்ற கட்சித் தலைவர் மு. தம்பிதுரை, எம்.பிக்கள் சி.வி.சண்முகம், இன்பதுரை, தனபால் ஆகியோர் உடனிருந்தனர்.

## டாக்டர் ச.வெங்கடேசனின் பிறந்த நாளை முன்னிட்டு

# திருவள்ளூர் பகுதியில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள்

## மாதவரம் வி.மூர்த்தி-திருத்தணி கோ.அரி ஆகியோர் வழங்குகின்றனர்

சென்னை, செப் 17-

திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க.மாணவரணி பொருளாளர் டாக்டர் ச.வெங்கடேசனின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் பகுதியில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ. திருத்தணி கோ.அரி ஆகியோர் வழங்குகின்றனர்.

சென்னை திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளரும், புரட்சித் தமிழர் எடப்பாடியார் பொது நலச்சங்க செயலாளருமான லயன் டாக்டர் ச.வெங்கடேசனின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் வீராபுரத்தில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா இன்று நடக்கிறது.

இந்த விழாவிற்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மாதவரம் வி.மூர்த்தி, திருவள்ளூர் மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற செயலாளரும்,கழக அமைப்புச்செயலாளரும்,முன்னாள் எம்.எல்.ஏ.வுமான திருத்தணி கோ.அரி ஆகியோர் கலந்து கொண்டு



முன்னாள் அமைச்சர்
மாதவரம் வி.மூர்த்தி



முன்னாள் எம்.எல்.ஏ.
திருத்தணி கோ.அரி

டாக்டர் ச.வெங்கடேசனை வாழ்த்தி நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானத்தை வழங்குகின்றனர்.

திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி. மு.க. மாணவரணி பொருளாளர் டாக்டர் ச.வெங்கடேசன் சத்ய நாராயணன் அறக்கட்டளை என்று ஒரு அறக்கட்டளை வைத்துள்ளார். இந்த அறக்கட்டளையின் மூலம் ஏழை,எளிய குழந்தைகளுக்கு கல்வி உதவிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து செய்து வருகிறார். அதேபோல் அ.தி.மு.க. கட்சி பணிகளையும் தொடர்ந்து செய்து வருகிறார்.

குறிப்பாக நடந்து முடிந்த அ.தி.மு.க. மதுரை மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையில் சென்னை, திருவள்ளூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 2000 ஆட்டோகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்து மாநாட்டிற்கு களப் பணி ஆற்றினார்.

மேலும் லயன்ஸ் கிளப் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறார். இதேபோல் இன்று நடக்கும் நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதான விழாவிற்கு டாக்டர் ச.வெங்கடேசன் தலைமை தாங்குகிறார்

இந்த நிகழ்ச்சிகளில் வில்லிவாக்கம் கிழக்கு ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் ஜி.வி. செந்தில்குமார், மேனாள் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனர் கோ.வெற்றிவேந்தன், கே.ஜலபதிநாயுடு.எஸ்.நவராஜ், எம்.கே.அம்மா முருகேசன், எம்.பி.குமார், டி.குப்பன், ஐ.பெரியா இளங்கோ மற்றும் கிளைக்கழக செயலாளர் என்.எழுமலை, வி.அய்யனார், ஏ.சங்கர், என்.பூங்காவனம், சி.எழுமலை, என்.மாரி, கே.முருகேசன், குமரேசன், எஸ்ரமேஷ், எம்கோzபால், ராஜ், ஏ.அர்ஜுனன், பி.ஹரிகுமார், எல்.அன்பு, ஜி. லாரன்ஸ், கே.கோவிந்தராஜ், ஆர்.ராஜேஷ், கே.ராஜன், ஜே.கோவிந்தராஜ், எஸ். தியாகராஜன், ஏ.பிரகாஷ், எம்.சுரேஷ், எஸ்.விஜயபாபு, பா.ராமு, எம்.சுரேஷ், ஏ.மனோகர், எம்.தேவேந்திரன், ஆர். ஆறுமுகம்,எஸ்.செல்லமுத்து, எஸ்.விஜி, வினோத், ஆனந்த், எஸ்.அண்ணாதுரை, எஸ். வேலு, ஏ.அருண், வி.பாலச்சந்திரன், ஏ.ஜெயபிரகாஷ், கே.கோபி, ஏ.பாக்கியலட்சுமி, ஆர்.சரஸ்வதி, வி.லதா, ஏ.மல்லிகா மற்றும் வில்லிவாக்கம் கிழக்கு ஒன்றியம் மோரை ஊராட்சி மற்றும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அ.தி. மு.க. நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்கின்றனர்.

# ரூ.28.33 கோடி மதிப்பீட்டில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

ஏக்கரில் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 18 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கு ரூ.34.07 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகள், என மொத்தம் ரூ.78.57 கோடி மதிப்பிலான 20 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலை உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. இவை அளவான முதலீட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கி ஒட்டுமொத்த சமூக-பொருளாதார மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பு செய்து வருகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட புதிய நான்கு தொழிற்பேட்டைகளின் விவரங்கள் வருமாறு.,

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், காவேரிராஜபுரம் கிராமத்தில் 29.24 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.16 கோடி மதிப்பீட்டில் 74 தொழில்மனைகளுடன் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு, தற்போது மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் தொழில்முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 400 நபர்கள் நேரடியாகவும், 800 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுவர்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முத்தூர் கிராமத்தில் 33.36 ஏக்கர் பரப்பளவில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் 91 தொழில்மனைகளுடன் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படவுள்ளது, இத்தொழிற்பேட்டையில் முதற்கட்டமாக 24.37 ஏக்கர் பரப்பளவில் ரூ.9.58 கோடி மதிப்பீட்டில் 34 தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டு தொழில்முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 500 நபர்கள் நேரடியாகவும், 1000 நபர்கள் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை பெறுவர்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கடம்பாடி கிராமத்தில் சிற்பகலைஞர்களுக்காக 21.07 ஏக்கர் பரப்பளவில் ரூ.15.39 கோடி மதிப்பீட்டில் 111 தொழில்மனைகளுடன் புதிய சிற்பக்கலை பூங்கா அமைக்கப்பட உள்ளது, இச்சிற்பக்கலை பூங்காவில் முதற்கட்டமாக 11.73 ஏக்கரில் ரூ.4.44 கோடி மதிப்பீட்டில் 66 தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டு சிற்பக்கலை சார்ந்த தொழில்முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இச்சிற்பக்கலை பூங்கா உருவாக்கத்தின் மூலம் சுமார் 600 நபர்கள் நேரடியாகவும், 1200 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுவர்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கொருக்கை கிராமத்தில் 15.44 ஏக்கர் பரப்பளவில் ரூ. 3.57 கோடி மதிப்பீட்டில் 58 தொழில்மனைகளுடன் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட உள்ளது, முதற்கட்டமாக 12.52 ஏக்கரில் ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் 47 தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 300 நபர்கள் நேரடியாகவும், 600 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுவர்.

கடலூர் மாவட்டம், கடலூர் நகர்புறத்தில் இயங்கிவரும் ஆட்டோமொபைல் பழுதுபார்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் மருதாடு கிராமத்தில் 11.57 ஏக்கரில் ரூ.4.39 கோடி மதிப்பீட்டில் தனியார் தொழிற்பேட்டை அமைப்பதில் தற்போது ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளுடன் 105 தொழிற்மனைகளை உள்ளடக்கிய புதிய தனியார் தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 600 நபர்கள் நேரடியாகவும், 1200 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுவர்.

கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையில் 316.04 ஏக்கரில் ரூ.24.61 கோடி மதிப்பில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்களிப்பு ரூ.12.30 கோடி மற்றும் பயனாளிகள் பங்களிப்பு ரூ.12.30 கோடி ஆகும். இதில் சாலைகள், சிறு பாலங்கள், தண்ணீர் வசதி, நிர்வாக அலுவலகம், தோரண வாயில் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் 585 தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியினை சார்ந்த மின்முலாம் பூசும் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 100-க்கும் மேற்பட்ட குறுந்தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் ரூ.2.60 கோடி மதிப்பில் 200 KLD திறன்கொண்ட பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது, இதில் மாநில அரசின் பங்களிப்பு ரூ.1.80 கோடி மற்றும் பயனாளிகள் பங்களிப்பு ரூ.80 இலட்சம் ஆகும்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு பகுதியினை சார்ந்த 50-க்கும் மேற்பட்ட உணவுப்பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள குறுந்தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் கருமாபுரம் கிராமத்தில் ரூ.8.20 கோடி மதிப்பீட்டில் உணவுப் பொருட்கள் தயாரிப்பில் அதன் மதிப்புக்கூட்டலுக்குத் தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் பரிசோதனைக் கூடங்கள் உள்ளடக்கிய உணவுப்பதப்படுத்துதல் குழுமத்திற்கான பொது வசதி மையம் நிறுவப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்களிப்பு ரூ.6.56 கோடி மற்றும் பயனாளிகள் பங்களிப்பு ரூ.1.64 கோடி ஆகும். ஆக மொத்தம் ரூ.67.34 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட 8 முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் தொடக்கி வைத்தார்.

அடிக்கல் நாட்டப்பட்ட திட்டப்பணிகள்:

ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிட்கோ தொழிற்பேட்டையில் வேளாண் பொருட்கள் உற்பத்தி சார்ந்த தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில் 17.95 ஏக்கரில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலம் சுமார் ரூ.15.23 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் 47 தொழில்மனைகள் மேம்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் வேளாண் பொருட்கள் உற்பத்தி சார்ந்த தொழில்முனைவேர்கள் பயன் பெறுவதோடு சுமார் 300 நபர்கள் நேரடியாகவும், 600 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுவர்.

சிட்கோ நிறுவனத்தின் மூலம் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் 1.36 ஏக்கரில் ரூ.29.27 கோடி மதிப்பீட்டில் தரை தளம் மற்றும் 3 தளங்களுடன் சுமார் 688 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 100 அறைகளுடன் தொழிலாளர் தங்கும் விடுதி கட்டப்படவுள்ளது. இவ்விடுதியில் பயணிகள் மின்தூக்கியுடன், நன்கு காற்றோட்டமான அறைகள், தாழ்வாரம், தீ பாதுகாப்பு, 24 மணிநேரமும் தண்ணீர் வசதி, விளையாடும் பகுதி, சலவையகம் மற்றும் அனைத்து தளங்களிலும் பொதுவான ஒப்பனை அறை, சமையலறை மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்யப்படவுள்ளது. இதை தவிர ஒவ்வொரு அறையிலும் அலமாரிகள், மின்விளக்கு, மின்விசிறி போன்ற வசதிகளும் அமைக்கப்படவுள்ளது. இவ்விடுதியானது திருமுடிவாக்கம் மற்றும் சுற்றியுள்ள தொழிற்பேட்டையில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்க வசதியாக இருக்கும்படி அமைக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் பராமரிக்கபட்டு வரும் 135 தொழிற்பேட்டைகளில், 18 தொழிற்பேட்டைகளின் சாலை, மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் தெருவிளக்கு போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.34.07 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளது. ஆக மொத்தம் ரூ.78.57 கோடி மதிப்பீட்டிலான 20 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தமிழ்நாடு கைத்திறத்தொழில்கள் வளர்ச்சிக்கழகத்தின் சார்பில் கைவினை தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட 7 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினை பொக்கிஷம் விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார். இதில் தா.மோ.அன்பரசன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் துறை செயலாளர் வே.அமுதவல்லி உள்ளனர்.



● புதுடெல்லியில் நேற்று மத்திய மின்சாரம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர் மனோகர் லால் தலைமையில் செயல்திறன் குறித்து நடைபெற்ற 5-வது குழு அமைச்சர்களின் கலந்துரையாடல் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச்செயலாளர் மங்கத்ராம் சர்மா, இயக்குநர் விஷ்ணு மகாஜன் ஆகியோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.